ISSN: 2012 - 6352

# தொண்டன்

ஆரம்பம் 1969 பெப்ரவரி









பெப்ரவரி - 2013 சமய - சமூக - இலக்கிய வெளியீடு

30/=

# தொண்டன்

**பெப்ரவரி - 2013**

மலர் - 45 இதழ் - 01

**ஆசிரியர்**
லெஸ்லி ஜெயகாந்தன்

**இணை ஆசிரியர்**
மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**
மெற்றில்டா இராஜேந்திரம்
பெஸ்லீயோ வாஸ்
சந்திரசேகரன் சசீதரன்
பைந்தமிழ்க்குமரன் டேவிட்

**ஆலோசகர்கள்**
A.G. இராஜேந்திரம்
A.S. யோகராஜா

**கணினி வடிவமைப்பு**
சுபாஜெனி சங்கர்

**வெளியீடு**
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு / மட். மறை மாவட்டம்

**முகவரி**
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு.

**பதிப்பகம்**
வணசிங்கா அச்சகம்
மட்டக்களப்பு.


## உள்ளே....




அன்புடன் உங்களோடு .............. 01
செபம் என்றால் என்ன ............... 02
அந்த இரண்டு நாட்கள் .............. 03
அன்பின் அரசி .......................... 04
தமிழில் கிறிஸ்தவ ................. 05
எம் பிதாவே ............................ 08
பாவை ஒரு .............................. 09
மாணவர் பக்கம் ...................... 10
இலக்கிய மஞ்சரி ..................... 11
கடுகுக் கதை .......................... 12
வத்திக்கான் செய்திகள் ............ 13
தொண்டனின் சில ................... 14
வேண்டுகிறோம் ....................... 17
மண்டைபுரம் ........................... 18
இன்றைய பாலியல் ................... 21
புனிதர்களை அறிவோம் ........... 24
தமிழ் ஆவண ........................... 26
விவிலியம் கற்போம் ............... 27
அறிவை வளர்ப்போம் .............. 28


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com



விலை : 30/=
ஆண்டு சந்தா : 500/=
(தபாற்செலவு உட்பட)

# அன்புடன் உங்களோடு....

தவக்காலம் தொடங்கிவிட்டால் பலரின் வாழ்வு நிலையில் மாற்றம் தொடங்கிவிடுகின்றது. காவி உடை அணிந்து தாடி வளர்த்து கடும் தவம் புரிவது, புகை, மது, மாது, புலால் என்று தவிர்த்து ஐம்புலன் அடக்கி விரதமிருப்பது, செலவுகளைக் குறைத்து தான தர்மங்கள் செய்வதற்குத் தாராளமாக முன்வருவது என எத்தனையோ தவ முயற்சிகள் இத் தவக்காலத்தின் பக்தி முயற்சிகளாக இறை மக்களிடையே பரவிவருகின்றது. இயேசுவின் பாடுகளும் மரணமும் குறிப்பாக இத் தவக்கால நாட்களில் இதயத்தை விட்டு விலகாத நிகழ்வுகளாக உள்ளன.

"உலகிலேயே மிகவும் நீளமான பயணம் மனிதன் தனக்குள் செல்கின்ற பயணம்" என்று சொல்வதுண்டு. தடம்மாறிச் செல்லும் தன் வாழ்வைத் தடுத்து நிறுத்தி, தன்னையே சுய ஆய்வு செய்து சரியான வழியில் நடை பயில்பவனே சிறந்த மனிதன்.

இப்படிப்பட்ட சுய ஆய்விற்கு திருச்சபை வழிவகுக்கின்ற காலம்தான் தபசுகாலம்.

சாம்பல் என்பது, அடையாளமே! பாவச் சாவைக் குறிக்கும் சின்னமே! வீம்பு ஆணவம் வீராப்பினை வீழ்த்திட நம்மையும் அழைக்கின்றதே.

**சாம்பல்:** "வெறுமையின் ஒன்றுமில்லாமையின் அடையாளம்" (எசே 28:18) (யோபு 12:12) மனிதன் "நான்தான் எல்லாம்" என்று தன்னை உயர்த்திப் பிடித்து, அகங்காரத்தோடும் ஆணவத்தோடும் வாழும் சூழ்நிலையில் அவனுடைய வெறுமையையும் ஒன்றுமில்லாத் தனத்தையும், மனித வாழ்வின் நிலையாமையையும் சுட்டிக் காண்பித்து, தாழ்ச்சிமிக்க வாழ்விற்கு அழைக்கின்றார் இறைவன்.

**சாம்பல்:** "துக்கத்தின் அடையாளம்" (2 சாமு 13:19) (எஸ்தர் 4:1)

மனிதன் தன்னுடைய பலவீனத்தின் காரணமாக கடவுளுக்கு எதிராகச் செல்கின்றான். இதையே பாவம் என்றழைக்கின்றோம். கடவுளுக்கு எதிராக நான் செய்யும் பாவங்களை நியாயப்படுத்தாமல் அவற்றை தாழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டு துக்கப்படுவது அவசியம் என்பதையே எடுத்துரைக்கின்றது.

**சாம்பல்:** "மனம் திரும்புவதன் அடையாளம்"

பாவங்களுக்காகத் துக்கப்படுவது மட்டும் போதாது; கடவுளை நோக்கி வருவது அதைவிட அவசியமானது. பேதுரு மற்றும் யூதாஸ் இருவரும் பாவம் செய்தவர்களே. தங்கள் பாவங்களுக்காக துக்கப்பட்டாலும் மனம் திரும்பியது பேதுரு மட்டுமே. இப்படிப்பட்ட மனம் திரும்புதலே நம்மிடமிருந்தும் எதிர்பார்க்கப்படுகின்றது.

எனவே, மனமாற்றத்தின் காலமாகிய இத்தவக்காலத்தினை அர்த்தமுள்ள தவக்காலமாக மாற்றி நம் வாழ்வை சரியான பாதையில் நடத்தி வாழ்வோம்.

– ஆசிரியர் –

இறைவாக்கு

"என் மக்களே சாக்கு உடை உடுத்துங்கள்; சாம்பலில் புரளுங்கள்"

• (எரேமியா 06:26)

# செபம் என்றால் என்ன...?

செபம் என்பது, நமது தேவைகளை கடவுளிடமிருந்து பெற்றுக்கொள்வது மாத்திரமல்ல, நம்மையும், நமது வாழ்வையும் ஐக்கியப்படுத்துவதே செபம். நமது விருப்பத்தை நிறைவேற்ற இறைவனை வற்புறுத்துவது செபம் அல்ல. நமது தீய வழிகளை விட்டு இயேசுவின் வழியில் நடப்பதுதான் செபம். மரியாள் ஆண்டவரைப் போற்றி புகழ்ந்தாள். **(லூக்கா 1-47)** இயேசு நாம் எப்படி செபிக்க வேண்டுமென்று கற்றுத் தந்திருக்கிறார். அந்தச் செபத்தில் பரிசுத்த வேதாகமம் முழுவதும் அடங்கி இருக்கிறது. அதில் பரலோக பிதாவைப் பற்றியும் அவருடைய பெயரே மகிமையானது, என்றும் கடவுளுடைய அரசு உறுதியானது என்றும், பிதாவின் சித்தம்தான் என்றும் நிறைவேற வேண்டுமென்றும் நமது அனுதின வாழ்வு கடவுளால் தான் நடக்கின்றது என்றும், பிறரை மன்னிக்கும் வாழ்வு கிறீஸ்தவ வாழ்வு என்றும் சாத்தானின் பிடியிலிருந்து நம்மைத் தப்புவிக்க கடவுள் ஒருவரே வல்லவர் என்றும் உலகிற்கு உணர்த்துகிறது.

இயேசு இந்த உலகத்தில் வாழ்ந்த காலத்தில் எப்படி செபிக்க வேண்டுமென்பதற்கு அவரே முன்மாதிரிகையாக இருந்தார். மாற்கு 1:35ல் விடியற்காலையில் கருக்கலில் எழுந்து இறைவனிடம் வேண்டினார். லூக்கா 6:12ல் இயேசு மலைக்குப் போய் கடவுளிடம் வேண்டுதல் செய்ய இரவெல்லாம் செலவிட்டார். லூக்கா 22: 41, 42ல் சிலுவைப் பாடுகளை சுமக்கு முன் செபித்தார். முழந்தால் படியிட்டு இறைவனிடம் வேண்டினார். லூக்கா 23:34ல் இயேசு சிலுவையிலிருந்து செபித்தார். தந்தையே இவர்களை மன்னியும். எபிரேயர் 5:7ல் இயேசு இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் தம்மை சாவிலிருந்து காப்பாற்ற வல்லவரை நோக்கி உரத்த குரலெழுப்பி கண்ணீர் சிந்தி மன்றாடினார்.

இயேசு இறைமகனாயிருந்தும் தந்தையோடு இணைந்திருந்தார். நமது ஜெபம் கேட்கப்படாததற்குக் காரணம் பாவம். நாம் எப்படி செபித்தாலும் இறைவன் செவிசாய்க்கமாட்டார். (எசாயா 59: 1-2) பிறர் சூனியம் செய்துவிட்டார்கள், மருந்து போட்டு விட்டார்கள் என சோர்ந்துபோய் கவலைப்படுகிறோம். நாம் இயேசுவை நம்பி வாழும் போது யார் எப்படிப்பட்ட மாயம் செய்தாலும் அது நம்மை அணுகாது. கர்த்தர் நம் சார்பில் இருக்கும்போது நமக்கு எதிராக நிற்பவர் யார்...? (எண்ணாகமம் 23:23) நாமும் இயேசு காட்டிய வழியைப் பின்பற்றுவோம். →

**- யோ. ஞானம் -**




உன் வாழ்க்கையில் நீ கவலையின்றி இருக்க வேண்டிய இரண்டு நாட்கள் குறித்துக் கவனமாயிரு. முதலாவது நாள் நேற்றைய நாள்.

நேற்றைய தவறுகள், காயங்கள், வலிகள், குறைகள் இதனைக் குறித்து ஒருபோதும் கவலைப் படாதே! அது உன்னையும் மீறிப் போய்விட்டது. இனி எத்தனை இலட்சங்கள் கொடுத்தாலும் அது உன்னிடம் திரும்பவே திரும்பாது. நான் செய்துவிட்ட சிறிய தவறைக் கூட அழிக்க முடியாது. ஏனென்றால், நேற்று அது போய் விட்டது.

மற்றையநாள் நாளை. நாளைய கனவுகள், சுமைகள், எதிர்பார்ப்புகள் எதுவும் நம் கட்டுப்பாட்டிற்குள் இல்லை. நாளை சூரியன் உதிக்கும்தான். ஆனால் அது மேகமற்ற வானமா அல்லது காரிருள் சூழ்ந்த வானமா என்று தெரியாது. ஆனாலும் நாளை அது உதிக்கத்தான்போகிறது.

ஒரே ஒருநாள் மாத்திரமே நிச்சயம் - இன்று. நீ யாராக இருந்தாலும், வாழப்போவது வெறும் ஒரே ஒரு நாள்தான். அந்தநாள் இன்றுதான்.

இப்படியிருக்கும்போது, எதற்காக நேற்றைய சுமைகளையும், நாளைய கவலைகளையும் சுமந்து உன் இன்றைய வாழ்வை மழுங்கடிக்கிறாய்? ஒரு மனிதனின் மனக் கோளாறுக்கான (பைத்தியத்திற்கு) காரணம் அவனின் இன்றைய நாள் அல்ல; நேற்றைய நாளின் கசப்பும், நாளை என்ன நடக்குமோ என்ற கவலையும்தான்.


எனவே, நண்பா வாழ்வோம்! அடுத்த நிமிடம் நிச்சயம் இல்லாத வாழ்க்கை. இருக்கும்வரை எல்லோரையும் சந்தோஷமாக இன்றே வாழவைப்போம்.

அருட்தந்தை P. ரமேஷ்

---

"என்னையா உங்களுக்கு பென்ஷன் 500/= கூட்டியிருக்கிறாங்களாமே...!

"அட போப்பா... சாமான் விலை கூடினது 1000/=க்கு மேல போகுதே....!"



— மணி —

---

இயேசுவைப்போல விசுவாசத்தோடு செபிப்போம். சோர்ந்துபோகாமல் செபிப்போம். பிறருக்காக செபிப்போம். மன்னிப்பை வேண்டி செபிப்போம். இயேசுவின் நாமத்திலே தூய ஆவியின் துணையோடு பிதாவை நோக்கி செபிப்போம்.

தலை குனிந்து ஜெபிப்பது ஆண்டவர் முன்னிலையில் நாம் தாழ்ச்சியாயிருப்பதைக் காட்டுகிறது. முழங்கால் படியிட்டு செபிப்பதோ ஆண்டவரை நமது அரசராகவும் தலைவராகவும் ஏற்றுக்கொண்டிருப்பதைக் காட்டுகின்றது. இவை திருமறையில் நமக்கு வலியுறுத்தப் படுகின்றது. (1 அரசர் 8:54) (தானியேல் 6:10)

# 14 அன்பின் அரசி அன்னை தெரசாவின் அம்மானைக் காவியம்



அன்னை எழுதிய அந்தத் திருமுகமோ
அர்த்தமது பொதிந்தே அனைவரையும் கவர்ந்திட
உலக அரங்கினிலே உரத்திட்ட குரலாக
எடுத்துமே உரைத்தாரே அன்னை தெரசாவும்
படிப்பவர் மனதைக் கவர்ந்திட்ட கடிதமாய்
பாராளும் அரசெல்லாம் அறிந்ததே அக்கணம்
கருத்துடன் அன்னை எழுதிய கையோடு
போரது முடிந்தே போனதே அம்மானை!

போரிலே புண்பட்ட வீரரைக் காத்திட
ஈராக்கிய தேசத்தின் சுகாதார அமைச்சரும்
நாடினார் அன்னையை நற்பணி செய்திட
ஈராக்கிய தேசமே ஏகினார் அன்னையே
சிறந்த பணிகளைச் செய்து குணமாக்கி
செத்துப் பிழைத்தோர்க்கு மறு உயிரளித்துமே
சீடர்களான சகோதரிகள் கூடவே
செய்தே முடித்தாரே பணியதை அம்மானை!

ஆயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்றிலே
மெக்ஸிக்கோ தேசத்து நிஜீவானா நகரிலே
சுற்றுப்பயண மொன்றை மேற்கொண்ட அன்னைக்கு
நிமோனியா ஜுரமது முழுமையாய்க் கண்டதே
உலகமே உருகிப் பிரார்த்தனை செய்திட
உருக்குலைத்த அந்த நோயுமே தீர்ந்திட
அவரே மறு பிறப்பாகி நின்றதை
மறுத்திட முடியுமோ நாமதை அம்மானை!

அந்தக் காலகட்ட வேளையது தனிலே
வறுமையில் வாடிய மக்களில் பலருமே
கருத்தடை செய்திடும் பழக்கமது கொண்டே
கருவிலே அழித்தனர் குழந்தைகள் தனையே
அப்படிப் பாதக நிகழ்வினை கண்ட
அன்னை அவர் தானும் உருக்கமதாகவே
உங்களுக்குக் குழந்தைகள் வேண்டாமென்றாலே
என்னிடம் தாருங்கள் என்றாரே அம்மானை!

பக்தியுடன் அன்னை செபிக்கும் செபமிதுவே
பகையுள்ள இடத்திலே அன்பினை விதைக்கவும்
தவறுகள் கண்டாலே மன்னிப்பை வழங்கவும்
பிளவுகள் வந்திடின் ஒற்றுமை காணவும்
பிழையது ஏற்படின் உண்மையைக் காணவும்
ஐயமது காணின் உறுதியாய் இருக்கவும்
விரக்தியின் விழிம்பிலே நம்பிக்கை காணவும்
விரைந்து வா இறைவா என வேண்டுவார் அம்மானை!

வயதாக வயதாக அன்னையின் உடல் நிலை
வாட்டமது கண்டே வாதைக்கு ஆனதால்
அறக் கட்டளை தலைமை பதவியது தனையே
துறந்திடவே நினைந்து இருந்தாரே அம்மானை
எப்படியாவது தலைமையான பதவிதனை
இன்னுமொருவருக்கு ஒப்புவிக்க நினைத்த போதும்
எவருமே பதவியதை ஏற்காது போனதாலே
அன்னையே தலைவியாய் இருந்தாரே அம்மானை!

தொடரும் .....

கலைக்கோட்டன் அ. இருதயநாதன்

# இரட்சணிய யாத்திரிகம் :

**அறிமுகம்:**

நூலாசிரியர்:

"கடவுள் என் இருதயத்தைத் திறந்தார். நான் அவரைத் துதிக்க என் வாயைத் திறந்தேன்"

இது இரட்சணிய யாத்திரிகம் என்னும் கிறிஸ்தவக் காப்பியத்தை இயற்றிய கிறிஸ்தவக் கம்பர்" என அழைக்கப்படும் H.A. கிருஷ்ணபிள்ளை (1827-1900) அவர்களின் கூற்றாகும். H.A.கிருஷ்ணபிள்ளை திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கரையிருப்பு என்னும் கிராமத்தில் சங்கரநாராயண பிள்ளைக்கும் தெய்வநாயகி அம்மாளுக்கும் மகனாக 1827 ஏப்ரல் மாதம் 23ம் திகதி பிறந்தார். இவரது இயற்பெயர் கிருஷ்ணன். பிறப்பால் வைணவரான இவர் கிறிஸ்தவ மதம் திருநெல்வேலியில் பரப்பப்பட்டபோது அதற்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டார். நல்லூர் என்னும் கிராமத்திலும் கிறிஸ்தவத்திற்கு எதிராகச் செயற்பட்டார். வைஷ்ணவ மதப் பற்றுடையவராயிருந்த இவர் கிறிஸ்தவராக மதம் மாறுவதற்குக் காரணமாயிருந்தது சாயர்புரம் மிஷன் கலாசாலையாகும். 1852இல் இக் கலாசாலையில் தமிழ்ப் பண்டிதராகத் தெரிவு செய்யப்பட்ட இவர் கால்டுவெல் (Rev.Caldwel) குருவானவரால் பணிக்கு அமர்த்தப்பட்டார். அக்காலம் முதல் கிறிஸ்தவத்தின் செல்வாக்காலும் நடைமுறைகளாலும் பெரிதும் கவரப்பட்டார். 1857இல் தினவர்த்தமானி பத்திரிகையின் ஆசிரியராகக் கடமை யாற்றியபோது வண.பீற்றர் பேர்சிவல் குருவானவருக்கு (Rev.Fr. Percival) தமிழ் கற்பித்தார். இவை கிறிஸ்தவப் பற்றாளராக இவர் மாறுவதற்கு ஏதுவாயின. இதன் பயனாக இவர் மைலாப்பூரிலுள்ள எஸ்.பி.ஜி ஆலயத்தில் 1858இல் திருமுழுக்குப் பெற்று ஹென்றி அல்பிரட் (Hentry Alfred) என்னும் பெயரினைப் பெற்றார். கிறிஸ்தவ சமயக் கருத்துகளைத் தன் ஆக்கங்களில் பதிவு செய்துள்ள இவர் 03.02.1900 இல் இவ்வுலகை நீத்தார்.

போற்றித் திருவகவல் (1884), இரட்சணிய யாத்திரீகம் (1894), இரட்சணிய மனோகரம் (1899), இரட்சணியக்குறள், இரட்சணிய பாலபோதனை ஆகிய செய்யுள் நூல்களையும் இலக்கண சூடாமணி (1883), இரட்சணிய சமய நிர்ணயம் (1898), கிருஷ்ணபிள்ளை கிறிஸ்தவரான வரலாறு




றூபி வலன்ரினா பிரான்சிஸ்
முதுநிலைவிரிவுரையாளர்
மொழித்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்



ஜோன் பன்யன்

(1893) ஆகிய உரைநடை நூல்களையும் இவர் எழுதியுள்ளார்.

**இரட்சணிய யாத்திரிகம்:**

இரட்சணிய யாத்திரிகம் தழுவல் நூலாகும். இதன் மூலநூல் ஜான் பன்யன் (John Banyan) என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய "The Pilgrim's Progress" என்னும் நூலாகும். இந்நூல் தமிழில் மோட்சப் பிரயாணம் என மொழி பெயர்க்கப்பட்டது. ஜான் பன்யன் இங்கிலாந்துத் திருச்சபையைச் சேர்ந்தவர். பின் திருமுழுக்குத் திருச்சபையில் (Baptist Church) இணைந்து மதபோதனை செய்யத் தொடங்கினார். இவரது போதகம் நாட்டுச் சட்டத்தை அவமதிப்பதாகக் கூறப்பட்டு 1661இல் சிறையில் அடைக்கப்பட்டார். சுமார் 12 வருடகாலம் சிறைவாசம் செய்தபோது உருவானதே இந்நூலாகும். இதனால் இந்நூல் "சிறைநூல்" எனவும் அழைக்கப்பட்டது.

> "நல்லவர்கள் மற்றவர்களுடைய நன்மைக்காக மட்டுமே வாழ்கிறார்கள். மற்றவர்களுடைய நன்மைக்காக அறிஞன் தன்னைத் தானே தியாகம் செய்துவிட வேண்டும். உனக்கு நான் நன்மை செய்வதன் மூலமாகத்தான் என்னுடைய நன்மையை நான் பெறமுடியும். இதைத் தவிர வேறு ஒரு வழியுமில்லை"
>
> - விவேகானந்தர் -


இந்நூலின் முதல் தமிழ் மொழி பெயர்ப்பு 1793இல் வெளிவந்தது. 1882 இல் மறைத் திரு சாமுவேல் போல் என்பவரின் மொழி பெயர்ப்பு வெளிவந்தது. தனக்கோடி என்பவர் வேதாகமத்தின் தமிழ்மொழி பெயர்ப்பை கிருஷ்ண பிள்ளைக்குக் கொடுத்தார். எனவே வேதாகமத் தெளிவுடன் மோட்சப் பிரயாணமும் அவரது மனதைக் கவரவே தமிழில் இரட்சணிய யாத்திரிகம் என்னும் நூலைப் படைத்தார். தனது வாழ்நாளின் இறுதிப் பதினான்கு வருடங்களையும் இந்நூலை எழுதுவதற்காகவே செலவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. தனது கிறிஸ்தவ வாழ்வியல் அனுபவங்களையே இந்நூலில் தந்திருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். "என் வாழ்க்கையை இந்நூலில் அப்படியே ஊற்றியிருக்கின்றேன்" என்றும் "என்னுடைய இதயத்தின் அடித்தள உணர்வுகள் அனைத்தும் இந்நூலில் அப்படியே பதிவு செய்யப்பட்டிருக்கின்றன" என்றும் இந்நூலின் முன்னுரையில் அவர் கூறுவதிலிருந்து இதனை அறியலாம்.

**அமைப்பு:**

இரட்சணிய யாத்திரிகம் ஆதி பருவம், குமாரபருவம், நிதானபருவம், ஆரணிய பருவம், இரட்சணிய பருவம் ஆகிய ஐந்து பருவங்களையும் 49 படலங்களையும் ஏறத்தாழ 3700 செய்யுட்களையும் கொண்டமைந்துள்ளது. மொழி பெயர்ப்பாயினும்

எச். ஏ. கிருஷ்ணபிள்ளை






"அவனைப் பார், திடீரென்று மாடிவீடு கட்டிவிட்டான். அவன் என்ன வேலை பார்க்கிறான்"

"அலுவலகத்தில் பியூனாக வேலை பார்க்கிறான்"

"இந்த உடல் எனக்கு ஒரு விளக்கு; என் உயிரே
இந்த ஒளிக்கான தீ; என் ரத்தமே எண்ணெய்;
இவை கொண்டு இறைவனை காண்பதற்காகவே
நான் வாழ்கிறேன்.

– வைரிதாசர் –

"வர வர எல்லாம் எக்கச்சக்கமாக விலையேறிட்டுது..."

"எதைச் சொல்றீங்க...?"

"முன்பெல்லாம் கிளாக் உத்தியோகத்திற்கு 3 வட்சம் வாங்கினார்கள். இப்ப ஒரேயடியா 5 இலட்சம் கேட்கிறாங்களே...!"




மூல நூலில் இல்லாத விடயங்களும் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக குமார பருவத்தில் இரட்சணிய சரிதப் படலம் என்னும் தனிப்படலம் அமைக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணபிள்ளை மேனாட்டு - கீழ்நாட்டுப் பண்பாட்டு மரபுகளை கலைத்திறனுடன் இணைத்துள்ளார். தமிழின் முதலாவது முற்றுருவகக் காப்பியம் என்னும் சிறப்பினை இக்காப்பியம் பெறுகின்றது. இதில் இடம்பெறும் பாத்திரங்கள் யாவும் உருவகப்படுத்தப்பட்ட பாத்திரங்களே.

**கதைச் சுருக்கம்:**

தவறான பதையில் வாழும் ஒருவன் நாளடைவில் பல்வேறு பாவங்களைச் செய்து அவற்றின் பாரத்தினைச் சுமக்க வேண்டியவனாகின்றான். தவறான பாதையில் செல்லும் அவனை (யாத்திரிகனை) குரு ஒருவர் சந்தித்து கடவுள், உலகத் தோற்றம், ஆதிமனிதர், சாத்தானின் சூழ்ச்சி, ஆதிமனிதனின் வீழ்ச்சி ஆகியவற்றை எடுத்துக்கூறி கிறிஸ்துவைப் பற்றி விளக்கி அவர் காட்டிய நெறியில் செல்லுமாறு கூற அவனும் நன்நெறியில் தன் பயணத்தைத் தொடர்கின்றான். ஆயினும் வழியில் எதிர்ப்படும் லௌகிகன் அவனைத் தவறான பாதைக்கு மீண்டும் திருப்பி விடுகின்றான். பின் அவன்முன் தோன்றும் குருவால் தெளிவுபெற்று வியாக்கியானியின் உபதேசமும் பெற்றுத் தெளிந்து சிலுவைக் குன்றை அடைகின்றான். இங்கு சிலுவைக் காட்சி கண்டு பாவச்சுமை நீங்கி புண்ணியநகர் நோக்கிச் செல்கின்றான்.

தொடரும் பயணத்தில் எழிற் சத்திரத்தை அடைகின்றான். அங்கு விவேகி, யூகி, பக்தி, சிநேகி என்னும் தவமகளிரின் வழி காட்டலில் பக்தி வாழ்வின் இயல்பையறிந்து பயணம் செல்கின்றான்.

பின் நிதானி என்பவரைச் சந்தித்து அவருடன் மாயாபுரி என்னும் இடத்தை அடைகின்றான். அங்கு இருவரும் சிறைப்படுகின்றார்கள். நிதானி இங்கு இறந்து விடுகின்றான். திருப்பயணி தப்பிச் செல்கின்றான். பின்னர் அடிக்கடி பயணத்தில் தடை ஏற்படுகின்றது. எனினும் நம்பிக்கையுடன் அவன் பயணிக்கின்றான். அகோர இராட்சதன், விடாக்கண்டன், கார் வண்ணன் ஆகியோர் இடையூறு விளைவிக்கின்றனர். இவற்றை வெற்றிகொண்டு திருப்பயணி பயணிக்கின்றான். இவனது பயணத்தின் நோக்கம் இறுதியில் நிறைவேறுகின்றது. இரட்சணிய நகரான தர்ம சேத்திரத்திலுள்ள இகபர சந்தியைக் கடந்து மனவுறுதி பெற்று மரணமடைந்து சுவர்க்காரோகணம் அடைகின்றான். இதுவே இக் கதையின் சுருக்கமாகும்.

– தொடரும் .......



# எம் பிதாவே!

பைந்தமிழ்க் குமரன் டேவிட்

எம் பிதாவே எம் பிதாவே!
ஏன் எங்களைக் கைநெகிழ்ந்தீர்
வேலியே பயிரை மேய
அமங்கலங்கள் நிலைபேறடைய
ஒப்பாரிகள் தாலாட்டுகளாக
ஓடி ஓடிக் களைத்து விட்டோம்
காட்டிலும் மேட்டிலும்
கனமழை வெள்ளத்திலும்
நாய்களுக்கும் நரிகளுக்குமிடையே
நக்கிப் பிழைக்கும் ஏதிலிகளாக
இன்னும் எத்தனை காலங்கள்
இப்படிக் கழிப்போம்....?


பொறுத்திருப்போம்
காலம் மாறும் என்றால்
பொறுத்துப் பொறுத்து
வெறுத்துப் போனதே
தர்மம் வெல்லும் என்பது
அதர்மம் கொல்லும் என்றாயிற்றே!
அரிச்சந்திரன்கள் எங்குமில்லை
சீதைகளைக் கூட்டிக்கொடுத்த
இராமன்களும்
துகிலுரிந்த துச்சாதனர்களும்
அரசலாந் தெருக்களில்
பவனி வருகின்றனரே
ஏனப்பா எங்களைக் கைநெகிழ்ந்தீர்....?

எஞ்சிக் கிடக்கும் எலும்புக்கூடுகள்
வேட்டை நாய்களின் எச்சிலுக்காய்
ஒன்றையொன்று கடித்துக்குதறி
மடிந்து போகின்றன....
உலகின் தெருக்களிலெல்லாம்
ஊரும் புழுக்களாகி
முடி வளர்ந்து முகங்கள் மாறி
புலம் பெயர்ந்தவர்களாகி
முகவரிகளைத் தொலைத்தோமே
ஏனய்யா எங்களைக் கைநெகிழ்ந்தீர்....?

பாலும் தேனும் பொழியும்
பண்பட்ட பூமி வேண்டாம்
பறை பிளந்து பயிர் விளைத்து
பசிபோக்க நாமுள்ளோம்
சுதந்திரமாய்ச் சுவாசிக்க வரம்தாரும்
எங்கள் முட்டைகள் உள்வாங்கி
உயிர்தரிக்கும் விந்தணுக்கள்
எம்மினமாய் இருக்கட்டும்
ஏனென்றால்
வரலாற்றுப் புகையிலையில்
புதைந்துபோன ஓரினமாய்ப்
போய்விடுவோம் எம்பிதாவே
கையேந்திக் கேட்கின்றோம்
கைநெகிழ்ந்து விடாதேயும்....
கைநெகிழ்ந்து விடாதேயும்.....!

## குறும்புப்பா ~ 105

நீர்நின்று உயிர்தோன்றி வாழும்
நீரின்றி உயிர்வாடி வீழும்
நீர்தோன்றி உயிர்வாழும் நீர்சூழ்ந்து உயிர்மாளும்
நீரேநின் இயல்புதான் என்னே!



~ மலர் ~

# பாவை ஒரு பதச்சோறு



நெற்றியிற் றிலக மில்லை
நிலவொளி முகத்திலில்லை
பற்றியே தோளிற் றொங்கும்
பாலனுக் குணவு மில்லை
வற்றிய முலையைச் சூப்பி
வாய் வலித் துறங்கும் பிள்ளை
பெற்றதாய் விதவை என்னும்
பெருந்துயர்க் கேது எல்லை....?

கட்டிளம் பருவப் பேதை
கணவனை இழந்த காதை
மட்டிலாத் துன்ப மாகும்
மனமது கனலில் வேகும்
பட்டியிற் கறந்த பாலைப்
பானையிற் கொணர்ந்த வேளை
சுட்டதோர் குண்டு பட்டுச்
சுருண்டனன் உயிரை விட்டு

"பயங்கரவாதி" என்னும்
பட்டமே அவனுக்கின்னும்
தயங்கிடா தளித்தார், நெஞ்சம்
தாங்குமோ ஏனிவ் வஞ்சம்...?
புயங்களை உயர்த்தி நின்று
போர்ப்பிணி முடிந்த தென்று
நயம்பட வுரைத்தார் ஆனால்
நங்கையுன் நீரோ கானல்

பெற்றவர் வறுமைக் கோட்டில்
பிறகெது மலர்ச்சி வீட்டில்?

சுற்றங்கள் விலகிப் போகும்
சுமைகளே வாழ்வில் மேவும்
கற்பனை தனிலு மின்பம்
கண்டிடா(ள்) அனைத்துந் துன்பம்
வற்றிய குளத்தைப் போன்று
வாழ்வெலாம் வெறுமை தோன்றும்

தமிழர்வாழ் விடங்கள் தோறும்
தடமெலாம் குருதி ஊறும்
அமைதியை இழந்த நெஞ்சம்
அழுதிடும் கண்ணீர் சிந்தும்
இமைதனைத் திறந்தால் கண்முன்
எத்தனை விதவைப் பெண்கள்...?
நமதுளம் வருந்தி நோகும்
நங்கையோர் பதச் சோறாகும்.

கவிஞர் நிலா தமிழின்தாசன்

## துணுக்குச் செய்திகள்

- உலகின் துயரங்களுக்கு அறிவியல் சார்ந்த கண்டுபிடிப்புகள் மட்டுமே தீர்வாக முடியாது. நம்பிக்கையுடன் கூடிய கண்ணோட்டமும் தேவை எனக் கூறியுள்ளார் வத்திக்கான் அவையின் தலைவர் பேராயர் ஸிக்மண்ட் ஸிமாவ்ஸ்கி. மேற்கத்திய நாடுகளில் மருத்துவப் பணி அளவுக்கதிமாக தொழில் மயமாக்கப்பட்டுள்ளதால், மருத்துவச் செலவுகள் கூடிவருகிறது என்ற அவர், இந்தப் போக்கு மாற வேண்டும் என்றும் அழைப்புவிடுத்தார்.

- உலகில் ௨௦ கோடிக்கும் அதிகமான குழந்தைகள் தேவையான உணவின்றி வாடுகின்றனர் என்று ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த ஒரு சமுதாய அமைப்பு கூறியுள்ளது.

- உலகில் மற்ற சமயத்தினரை விட கிறிஸ்தவர்கள் அதிக அளவில் அச்சுறுத்தலை எதிர்நோக்குகின்றனர் என்று ருபர்ட் ஷார்ட் என்ற நிருபர் அண்மையில் வெளியிட்ட புத்தகம் ஒன்று தெரிவிக்கின்றது.

கத்தோலிக்க திருமறை

# மாணவர் பக்கம்

க.பொ.த. (உயர்தரம்)

-நில்மினி கஜேந்திரன்-

## கிழக்கு மத்திய ஆசிய நாடுகளில் கிறிஸ்தவம் பரவுதல்

கிறிஸ்தவம் ஓர் ஆசிய மதமாக விளங்குகிறது. இது ஆசியாக் கண்டத்திலேயே குறிப்பாக தென்மேற்கு ஆசியாவின் கடலோரமாய் அமைந்திருக்கும் பாலஸ்தீனத்திலேயே தோன்றியது. இயேசுவின் விண்ணேற்பைத் தொடர்ந்து, அவருடைய பணிப்புரையின் பேரில் அவரின் சீடர்கள் உலகெங்கும் சென்று நற்செய்தியைப் போதித்தார்கள். இந்நற்செய்தி ஆனது அப்போஸ்தலரான தோமா வழியாக கிழக்கு நோக்கிக் கொண்டு செல்லப்பட்டது.


இவர் முதலில் பார்த்திபப் பேரரசு என அழைக்கப்படும் ஈரானிலும் தொடர்ந்து இந்தியா வரைக்கும் கிறிஸ்தவத்தைப் போதித்து, கிறிஸ்தவ சமூகங்களையும் ஸ்தாபித்தார். ஆசியாவிலே கிறிஸ்தவத்தை நம் நாட்டு மதமாக ஏற்றுக்கொண்ட முதல் நாடு ஆர்மேனியாவாகும். இது 301ல் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து 325ல் எத்தியோப்பியாவும், 337ல் ஜோர்ஜியாவும் கிறிஸ்தவ நாடுகளாகின. 431ல் இடம்பெற்ற எபேசு பொதுச் சங்கத்தின் பின் தோன்றிய நெஸ்தோரியப் பேதகத்தினால் பிரிவினைக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவத்தை 7ம் நூற்றாண்டில் இந்தியா, இலங்கை, மொங்கோலியா நாடுகளுக்கும், சீனாவுக்கும் கொண்டு சென்றனர்.

மத்திய காலத்திலே கிறிஸ்தவத்தை தூர கிழக்கு நாடுகளுக்கு எடுத்துச்செல்ல முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த மோன்ரோகோர்வினோ ஜோண் என்பவர் 1307ல் பீக்கிங் நகரப் பேராயராக நியமனம் பெற்று அங்கு சென்றார். அப்போது சீனாவில் ஏற்பட்ட மிங் சாதியினர் எதிர்ப்பின் காரணமாக அவர்கள் மேற்கொண்ட மறைபரப்புப் பணியானது வெற்றியளிக்கவில்லை. 1498ல் போர்த்துக்கேய மாலுமிகள் வஸ்கொடகாமாவின் தலைமையில் இந்தியாவிற்குச் சென்று, கோவாவைத் தம் வாணிப நிலையமாக அமைத்தனர். இவர்களுடன் முதலில் பிரான்சிஸ்கன் சபையினரே இந்தியா சென்றனர். பின்னர் டொமினிக்கன் சபையினரும் சென்றனர். கோவா நகரமே இவர்களின் மறைபோதக மையமாய் விளங்கியது. இருப்பினும் பல்வேறு காரணங்களால் அவர்கள் மேற்கொண்ட மறைபோதகப் பணி வெற்றியளிக்கவில்லை. போர்த்துக்கேயரின் துர்நடத்தையும், முகமதியர் விதித்த தடைகளும் இதற்குக் காரணமாய் இருந்தன.

இருப்பினும் 1542ல் இயேசு சபையைச் சேர்ந்த புனித பிரான்சிஸ்கு சவேரியாரின் வருகையின் பின்னரே மறைபோதகப் பணி வெற்றியளித்தது. புரட்டஸ்தாந்து புரட்சியின் பின் திருச்சபையில் ஏற்பட்ட மத மறுமலர்ச்சியின் காரணமாக கீழைய நாடுகளில் ஏற்பட்ட திருச்சபையின் வளர்ச்சியை படிக்கும்போது சீனா, கொரியா, ஜப்பான், பசிபிக் (பிலிப்பைன்ஸ்) தீவுகள், இந்தியா, இலங்கை என்பன முக்கிய இடங்களாக அமைகிறது. இவ்வாறு கிழக்கு மத்திய ஆசிய நாடுகளில் கிறிஸ்தவ மதம் தீவிரமாய்ப் பரவியமையைக் காணக்கூடியதாக உள்ளது. ■

"என்றைக்கோ ஒருநாள் உயிர்
நீங்குவதற்கு வருந்துகிறோமே,
அதற்குக் காரணம் நமது
அபிமானம்தான். நாம்
அபிமானம் கொண்டிருக்கும்
உடலில் இவ்வளவு நாள்
உயிர் நீங்காதபடி
செய்திருந்தானே இறைவன்,
அதற்காக அல்லவா நாம்
இறைவனுக்கு நன்றி செலுத்த
வேண்டும்? ஒன்பான் வாயில்
உடம்பில் உயிர் நிற்றலோ
வீதலோ வியப்பு"

- குமரகுருபரர் -




இம்முறை இலக்கிய மஞ்சரியில் இரண்டு திரைப்படங்கள் பற்றி குறிப்பிடவேண்டியுள்ளது. ஒன்று நெடுந்திரைப்படம்; மற்றையது குறுந் திரைப்படம்; முன்னையதின் பெயர் 'சாட்டை' மற்றையதின் பெயர் 'நானும் ஒரு தாய்'


'பள்ளிக்கூடம்' படத்தின் பின் பாடசாலை பற்றி பெரிய அளவில் சொல்லும்படம்தான் 'சாட்டை'. இயக்குனர் சமுத்திரக்கனி (அரசி நெடுந்தொடர் இயக்குனர்) கதாநாயகனாக நடித்துள்ளார். கிராமப்புற அரசினர் பாடசாலையை மற்றையோர் வியக்கும்படி உயர்த்திக்காட்டும் ஆசிரியர் பாத்திரத்தில் அவர் நடித்துள்ளார். பாடசாலையில் முதன் முதலில் கடமையேற்றது முதல் இறுதி வரை பாடசாலைக்காக அவர் படும் பாடுகள், எடுக்கும் முயற்சிகள் அதன் மூலம் அவர் பெறும் வெற்றிகள் பற்றிச் சொல்லும் படம்தான் 'சாட்டை'. கதாநாயகன் உண்டு; கதாநாயகி இல்லை. கதாநாயகன் பறந்து பறந்து அடிக்கும் காட்சிகள் எதுவும் இல்லை. ஆனால் அடிவாங்குகிறார், அவமானப்படுத்தப்படுகின்றார்.

அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், கல்வியதிகாரிகள் ஆகிய ஒவ்வொரு வகையினருக்கும் இப்படம் நல்ல 'சாட்டையடி' கொடுக்கின்றது. இத்திரைப்படம் சொல்லும் கதை, காட்சியமைப்பு என்பன எமக்கு அன்னியமானவையாகக் காணப்படவில்லை. எமது பாடசாலைகளில் நடைபெறுவதுபோன்ற யதார்த்தமான காட்சியமைப்புகள்தான்.

தனியார் பாடசாலைகள் சிறப்பானவை: அரசினர் பாடசாலைகள் தரம் குறைந்தவை என்னும் மாயை உடைக்கப்படுகின்றது. மாணவர்களை அன்பினால் கவரலாம் என்னும் உண்மை உறைப்பாய் உணரவைக்கப்படுகின்றது. எம்மவர்கள் பலரின் மனப்பாங்கு உடைக்கப்பட வேண்டும் அல்லது உடைய வேண்டும் என்று வலியுறுத்துகின்றது. மன்னிப்பதன் மூலம் பலரை வெற்றி கொள்ளலாம் என்று கூறுகின்றது. அனைவரும் ஒருதடவை பார்க்க வேண்டிய படம்: இளந்தலை முறையினர் (திரைப்படத்துறையின்) நன்றாகச் சிந்திக்கின்றார்கள்.

அண்மையில் வெளிவந்துள்ள இன்னுமொரு வித்தியாசமான திரைப்படம் 'அம்மாவின் கைபேசி'. நல்லதொரு திரைப்படம். தங்கர் பச்சான் இயக்கி, நடித்து ஒளிப்பதிவு செய்து, இசையமைத்தும் உள்ளார். ஆனால் திரைப் படத்தைப் பார்க்க மிகுதியான பொறுமை வேண்டும். காட்சிகளின் நகர்வுகள் அப்படி. காணமல் போன மகனை தாயுடன் கைப்பேசி இணைக்கின்றது. ஆனால் இறுதிவரை அவர்கள் சந்திக்கவேயில்லை. ஒரு தடவை பார்க்கலாம்.

அடுத்து, 'நானும் ஒரு தாய்' என்னும் குறுந்திரைப்படம் பற்றிப் பார்ப்போம். மட்டக்களப்பின் மைந்தன் 'கோவர்த்தனன் பத்மநாதன்' இக்குறுந்திரைப்படத்தை இயக்கி



துரைசிங்கம் சேர் வகுப்பில் வரலாறு படிப்பித்துக் கொண்டிருந்தார். அப்போது, அன்ரனின் மகன் “சேர் சந்தேகம்” என்று கையை உயர்த்தினான். “சொல்லு மனே...” என்று துரையர் சொன்னார்.

“சேர், இப்ப நீதிமன்றத்திற்கும், பாராளுமன்றத்திற்கும் இழுபறி. கோட் ஓடர பாளிமன்ற் பின்பற்ற தயாரில்ல. அஞ்சு வருசத்துக்கு முந்தி திருமல பஸ் ஸ்டாண்டில வச்ச சிலையை எடுக்கச் சொல்லி கோட் போட்ட ஓடரயும் இன்னும் அமுல்படுத்தல்ல.... அது ஒரு பக்கம் இருக்கட்டும். பாராளுமன்றத்திற்கு ஆக்கள அனுப்பிறது நாங்க.... நீதிமன்ற உத்தரவ மீறும் பவர் பாராளுமன்றத்திற்கு இருக்குமெண்டா, பாராளுமன்றத்திற்கு எம்.பிக்கள அனுப்புற பொதுமக்களுக்கும் பவர் இருக்குதானே....?”

“அப்படியெண்டா, நீதிமன்ற உத்தரவ மீறுகின்ற பவர் எங்களுக்கும் இருக்குதானே....?”

துரைசிங்கம் சேர் வியர்த்து விறுவிறுத்துப் போனார். முப்பது வருச சேவையில இப்படியொரு விடை தெரியா ‘குண்டக்க மண்டக்க’ கேள்வியை அவரிடம் எவரும் கேட்டதில்லை.

“இந்தச் சமூகத்த வழிநடாத்திறவங்க எவ்வளவு பிழையான முன்னுதாரணமாக மாறிக்கொண்டு போறாங்க.....” என்று அவர் தன் தலையில் அடித்துக்கொண்டார்.

- பற்றி -

நடித்துள்ளார். புனித.மிக்கேல் கல்லூரியின் பழைய மாணவரான இவரின் முயற்சி அற்புதம். youtube ல் இப்படத்தைப் பார்க்கக் கிடைத்தது. ஐந்துக்கும் மேற்பட்ட விருதுகளைப் பெற்றுள்ள இப்படம் பெண்ணியத்தை மேன்மைப்படுத்துகின்றது. நகைச்சுவையுடன் எளிமையாக இப்படம் நகர்கின்றது. 11 நிமிடங்களும் 34 வினாடிகளும் ஓடும் இப்படம் அற்புதமான காவியம். கோவர்த்தனன், இயக்குனர் பாலுமகேந்திராவிடம் பயிற்சி பெற்று வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

**“மனிதன் சிந்திக்கும் பிராணி. சிந்தனைச் சக்திக்குச் சுதந்திரம் தேவை. சுதந்திரம் இல்லாவிட்டால் உண்மையான சிந்தனா சக்தி உண்டாகாது”**

**- லாக் -**



## 2013ம் ஆண்டு நடைபெறவிருக்கும் அகில உலக இளையோர் நாளுக்கான திருத்தந்தையின் செய்தி

“நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்” என்ற மையக் கருத்தில் இந்த ஆண்டு ஜூலை மாதம் நடைபெறவிருக்கும் அகில உலக இளையோர் நாளுக்கான செய்தியை திருத்தந்தை வழங்கியுள்ளார். இச்செய்தியில் புதிய நற்செய்திப் பணிக்கென இளையோர் தங்களை இன்னும் ஆர்வமாய் ஈடுபடுத்திக்கொள்ள வேண்டுமென்ற அழைப்பை அவர் விடுத்துள்ளார்.

கிறிஸ்துவின் சீடர்களாதல், அனைத்து நாடுகளையும் ஒன்று சேர்த்தல், நம்பிக்கையில் ஊன்றியிருத்தல் ஆகிய எண்ணங்கள் உட்பட, இச்செய்தியை எட்டுப் பகுதிகளாக திருத்தந்தை விடுத்துள்ளார்.

இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் ஆரம்பமானதன் 50ம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் அகில உலகத் திருஅவை, நம்பிக்கை ஆண்டையும், புதிய நற்செய்திப் பணி என்ற கருத்தையும் சிறப்பித்து வரும் இவ்வேளையில், பிரேசில் நாட்டில் நடைபெறவிருக்கும் இளையோர் நாள் சிறப்பு வாய்ந்த ஒரு தருணம் என்று திருத்தந்தை தன் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



## “தவறு செய்வோர் மீண்டும் நன்னெறியுடன் வாழ வழிவகைகள் செய்வதும் நீதியின் ஒரு முக்கிய அங்கம்”

**- திருத்தந்தை -**

“தவறு செய்வோரைத் தண்டிப்பது மட்டும் நீதி ஆகாது. மாறாக, அவர்கள் மீண்டும் நன்னெறியுடன் வாழ வழிவகைகள் செய்வதும் நீதியின் ஒரு முக்கிய அங்கம் என்று திருத்தந்தை 16ம் பெனடிக்ட் கூறினார்.

உரோம் நகரில் நடைபெற்ற சிறை அதிகாரிகளின் உயர்மட்டக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஐரோப்பிய பிரதிநிதிகளை வத்திக்கானில் சந்தித்த திருத்தந்தை, மனித நீதி, இறை நீதியின் அடிப்படையில் உருவாக வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

காகிதங்களில் எழுதப்படும் நீதிமன்றத் தீர்ப்புகளை மனதில் எழுதி, அவற்றைத் தகுந்தவகையில் அர்த்தம் கண்டு, தீர்ப்புக்குள்ளானவர்களை வழி நடத்தும் கடினமான பணி உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்று திருத்தந்தை சிறை அதிகாரிகளிடம் கூறினார்.

# வத்திகான் செய்திகள்

இம்முறை 'தொண்டனின் சில நிமிடங்களுக்காக' மட்டக்களப்பின் பிரபல வர்த்தகர் திருவாளர் சண்முகம் சிவபாதசுந்தரம் அவர்களைச் சந்தித்தோம். மட்டக்களப்பு பகுதி மக்களால் 'அண்ணாச்சி' என்று அழைக்கப்படும் ச. சிவபாதசுந்தரம் அவர்கள் வாழ்க்கையின் அடிமட்டத்தில் இருந்து படிப்படியாக முன்னேறியவர். சிறந்த முயற்சியாளர். இவரின் முயற்சி, விடா உழைப்பு, முன்னேற்றம் என்பன சமுதாயத்தில் ஏனையோருக்கு குறிப்பாக, இளைஞர்களுக்கு நல்ல முன்மாதிரிகை. வாழ்க்கையில் எவ்வளவுதான் உயர்ந்தாலும், இவரின் தன்னடக்கம், பணிவு, அன்புகாட்டும் பண்பு என்பன இவரை மேலும் உயர்த்துகின்றன. இவரை, அவரின் 'ஊறணி' இல்லத்தில் நீண்டநேரம் சந்தித்து உரையாடினோம்.

ஆழியோன்

- **உங்களின் இளம்பராயம், குடும்பநிலை பற்றி வாசகர்களுக்குச் சொல்ல இயலுமா...?**

- ஆமாம்! எனது பெயர் சிவபாதசுந்தரம். தகப்பனார் பெயர் சண்முகம். தாயாரின் பெயர் கமலம். எனக்கு 5 தம்பிகளும், 5 தங்கைகளும் உள்ளனர். நான் பிறந்தது காரைநகரில். இப்போது எனக்கு 58 வயதாகின்றது. இரண்டு பெண்பிள்ளைகளும், ஒரு மகனும் உள்ளனர். மூத்த மகள் திருமணமாகி ஒரு பிள்ளையும் உண்டு.

- **உங்கள் சிறுவயது அனுபவங்கள் பற்றி ....**

- அது கஷ்டமான காலம். ஆனால், என்னைப் புடம்போட்ட காலங்கள். தகப்பனார் வண்டில் மாடு வைத்திருந்தார். சிறிய அளவில் வயல் இருந்தது. வயலின் அறுவடை குடும்ப தேவைக்கு மட்டும்தான் போதுமானது. பாடசாலை விட்டு வந்து மாலை வேளைகளில் அப்பாவுக்கு வண்டில் வேலைகளில் உதவுவேன். இரட்டை மாட்டு வண்டில் அது. மண் ஏற்றும் போது, மண் கும்பியில் வைத்து அரை வாசி மண்தான் வண்டியில் ஏற்றலாம். இல்லாவிட்டால் மணலில் வண்டி புதைந்து விடும். வண்டிலைச் சற்று அப்புறப்படுத்திவிட்டு மணலை கும்பியில் இருந்து அள்ளி வண்டி லில் ஏற்றவேண்டும். இவ்வாறான வேலைகளில் அப்பாவுக்கு உதவுவேன். ஒருநாள் அப்பா மண்ணை ஏற்றிவிட்டு முன்பக்கம் கையை யூன்றி வண்டிலில் ஏறும்போது கை சறுக்கி வண்டில் சில்லுக்கு முன் விழுந்துவிட்டார். மாடுகள் முன்னால் நகரத்தொடங்கிவிட்டால் சில்லு அப்பாவின்மேல் ஏறும் நிலை. இதை அவதானித்த ஒரு மாடு சட்டென்று இரண்டு எட்டுகள் பின்னால் வைத்து வண்டிலை பின்னால் நகர்த்தி அப்பாவைக் காப்பாற்றியது (சொல்லும்போது கண்கலங்குகிறார்). இந்த மாட்டை அப்பா கடைசிவரை விற்கவேயில்லை. அதன் இறுதி அடக்கமும் எங்கள் வளவில்தான் இடம்பெற்றது.

இதற்கிடையில், அதிகாலை வேளையில் எங்கள் நண்பர்களுடன் சேர்ந்து இரண்டு மைல்கள் தூரம் சென்று (கடற்கரைப்



பக்கமாக) போட்டிக்குச் சாணம் பொறுக்கு வோம். இருட்டுவேளையில் சாணம் பொறுக்கும்போது, சிலவேளையில் நாயின் அசுத்தமும் அள்ளுப்பட்டுவிடும். சாணத்தை விற்றுப் பணத்தை அம்மாவிடம் கொடுப்பேன். மூன்றாம், நான்காம் வகுப்பு படித்துக்கொண்டி ருந்த காலம் அது.

- **பின்னர் எவ்வாறு வியாபாரத் துறைக்குள் உள்வாங்கப்பட்டீர்கள்?**

5ம் வகுப்பு படித்துமுடித்த பின்னர் சித்தப்பா முறையான ஒருவரின் கடையில் வேலைக்குச் சேர்ந்தேன். அக்கடை மாவனெல்லவில் அமைந்திருந்தது. பால் முகவர் நிலையம் அது. சைக்கிளில் முன்பக்கமும், பின்பக்கமும் பால் போத்தல்களை அடுக்கிக்கொண்டு வீடு வீடாகப் போய் பால் விநியோகம் செய்ய வேண்டும். ஏற்ற இறக்கமான பாதைகள். சில வேளைகளில் சைக்கிளைத் தள்ளிக்கொண்டுதான் செல்லவேண்டும். எனக்கு அப்பகுதி மக்கள் வைத்த பெயர் 'பால்கார சுந்தரம்'. எனது மாதச் சம்பளம் ரூபா முப்பது. அப்போது பவுனொன் றின் விலை ரூபா 360/=. எனக்கு அப்போது சிங்களம் அறவே தெரியாது. மற்றவர்கள் சிங்களம் கதைக்கும்போது எனக்குச் சிரிப்புதான் வரும். பின்னர் சிங்களம் படிப்படியாகப் புரியத் தொடங்கியது.

பின்னர், பாணந்துறையில் ஒரு கடையில் வேலை செய்தேன். இரவு 11.30 மணிவரை மாவு மூடைகள் அடுக்கவேண்டும். தொடர்ந்து சில வருடங்கள் நுகேகொடையில் சில்லறைக் கடையொன்றில் வேலைசெய்தேன்.

- **அப்படியானால் எவ்வாறு மட்டக்களப்பிற்கு வந்து சேர்ந்தீர்கள்?**

கடவுளின் செயல்தான். எனது மாமனார் முறையான ஒருவர் சிறைச்சாலைகளுக்கு இறைச்சி, மீன், மரக்கறி வகைகளை விநியோகம் செய்யும் ஒப்பந்தம் பெற்றிருந்தார். நாடு முழுவதும் விநியோகம் செய்யவேண்டும். நான் அவரிடம் பணியாற்றியதால் பல்வேறு சிறைச்சாலைகளுக்கும் செல்லவேண்டியிருந் தது. அவ்வகையில் மட்டக்களப்பு சிறைச் சாலையின் விநியோகப் பணி எனக்கு வழங்கப் பட்டது. மட்டக்களப்பு சந்தையில் பொருட்களை கொள்வனவு செய்து சிறைச்சாலைக்கு வழங்க வேண்டும். ஏற்றுக்கூலியாக நாளொன்றுக்கு 20/= கொடுக்கலாம். எனவே, பொருட்களை ஏற்றியிறக்கும் பணிகளையும் நானே செய்தேன். நண்பகலுடன் வேலைகள் முடிவடைந்துவிடும். மாலைவேளையில் ஓய்வு.

அக்காலகட்டத்தில் மட்டக்களப்புப் பொதுச்சந்தையில் சிறிய தகரக்கடையொன்று (சூறாவளிக்கு முன்) வாடகைக்கு வந்தது. அந்தக் கடையை சிரமப்பட்டு பெற்றுக்கொண்டு வர்த்தகர்கள் சிலரின் உதவியுடன் கடனுக்குச் சில பொருட்களைப் பெற்றுக்கொண்டேன். ஊருக்குச் சென்று செத்தல்மிளகாய் மூடை கள் கொஞ்சத்தை பஸ்ஸில் கொண்டுவந்தேன். கடை ஆரம்பமானது. மின்சாரம் இல்லை; தங்குமிடம் இல்லை; கடையிலேயே தங்கினேன். வாவிக்கரைப் பற்றைக் காடுகள் இயற்கைக் கடனுக்கான இடங்களாயின. சகோதரர்கள் சிலரை வரவழைத்து, கடைக்கு உதவியாக வைத்துக்கொண்டேன். கடைக்குப் பெயர் இல்லை. கலண்டர் ஒன்றில் இருந்த பெயரைப் பார்த்து 'வேல்முருகன்' என்ற பெயரை முன்னால் தகரத்தில் எழுதினோம்.

சூறாவளி வந்தது. 1978ல் கடையெல்லாம் தரைமட்டம். என்ன செய்வது என்று தெரியவில்லை. ஊர் திரும்ப ஆயத்தமானோம். அப்போது 'சிவநடராசா ஸ்டோர்ஸ்' முதலாளி என்னிடம் சொன்னார், “தம்பி இப்ப நீ, நான், அந்த முதலாளி, இந்த முதலாளி எல்லாரும் ஒரே மட்டத்திற்கு வந்துவிட்டோம். சோர்ந்து போகாதே....! முன்னேறு....! வழியுண்டு” என்றார். மீண்டும் கடையைத் திருத்தினோம். மின்சாரம் கிடைத்தது. கச்சேரி உதவி செய்தது. நண்பர் கள் உதவினார்கள். கடவுள் கிருபையால் முன்னேறினோம். ஒரு கடையால் பெற்ற வருமானத்தைக் கொண்டு இன்னொரு வியாபாரத்தை ஆரம்பித்தோம். அதன் பயனைக் கொண்டு மற்றொரு வியாபாரத்தை ஆரம்பித்தோம்.

- **நீங்கள் மற்றும் உங்கள் சகோதரர்கள் அனைவரும் மிகவும் ஒற்றுமையுடன் இருப்பதைக் கண்கூடாகக் காண்கின்றோம். இதன் இரகசியம் என்ன?**

கஷ்டப்பட்டு முன்னேறினோம். கஷ்டம் என்றால்

என்னவென்று எங்களுக்குத் தெரியும். ஒவ்வொரு சகோதரரும் திருமணம் செய்யும் போது, திருமணத்தின் பின் எல்லோரும் ஒன்று கூடுவோம். புதிய உறுப்பினருக்கு எங்கள் ஒற்றுமையை விளக்கி, அவரையும் எங்கள் ஒற்றுமைக்குப் பங்காளியாக்கிவிடுவோம். தற்போது, அவரவர்களுக்குரியதை அவரவர் களுக்குக் கொடுத்துவிட்டோம். அவர்களும் சுயமாக முன்னேறுகின்றார்கள்.

- **உங்கள் அனுபவத்தின் அடிப்படையில் 'தொண்டன்' வாசகர்களுக்கு, குறிப்பாக இளைஞர்களுக்கு என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்....?**

- முயன்றால் முன்னேறலாம். எந்தத் தொழிலையும் இழிவாக எண்ணக்கூடாது. சறுக்கினால் நிமிர வேண்டும். விழுந்தால் எழும்பவேண்டும். இப்படி அடிபட்டு, அடிபட்டுதான் நான் முன்னேறினேன். முயற்சி இருந்தால், கடவுளின் ஆசீர்வாதம் தானே கிடைக்கும். முன்னேறிய பின் ஆணவம், அகம்பாவம் அறவே கூடாது. பணிவுதான் படிப் படியாகக் கூடவேண்டும். தற்போது, என்னி டம் பதினாறுக்கு மேற்பட்டவர்கள் பணி புரிகின்றார்கள். அவர்களும் நன்றாக முன்னேற வேண்டும்.

என்னை வாழவைத்த மண் 'மட்டக்களப்பு' மண். 'அண்ணாச்சி' என்ற பெயரையும் சூட்டி யது இந்த மண்தான்.

ஈற்றில் தொண்டனின் சார்பில் நன்றி கூறி விடைபெற்றுக்கொண்டோம். ஆரம்பத்தில் 'தொண்டனுக்குப்' பேட்டிதரத் தயங்கினார். ஏனென்றால், 'தன்னைப்பற்றிச் சொல்லப்போனால் தற்பெருமை பேசுவதுபோல் ஆகிவிடுமோ....?' என்ற பயம்தான் அவருக்கு. அவரைப்பற்றி மேலும் அறிந்ததில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் இருநூறு மூடைகள் அரிசி உட்பட பருப்பு, சீனி என்றும் பணமாகவும் பொருளாகவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சைவக் கோவில்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், வயோதிபர் இல்லங்கள் போன்றவற்றிற்கு வழங்குகின்றார். ஏழை மாணவர்களின் கல்விக்கு உதவுகின்றார். இதையெல்லாம் பற்றி பேட்டியில் ஒரு வார்த்தைகூட மூச்சுவிடவில்லை.




"புதிய ஆண்டு ஒன்று தொடங்கியுள்ளது. ஆண்டவனே, இந்த ஆண்டில் எல்லாமே நல்லதாக நடக்க வேண்டும். நானும் எனது குடும்பமும் சுற்றமும் உற்றமும் நோய்களின்றி நலமாக வாழ வேண்டும், நாடும் நன்றாக உயர வேண்டும், உலக மக்கள் அனைவரும் அமைதியை அனுபவிக்க வேண்டும்...", இப்படித்தான் இந்த 2013ம் ஆண்டை நாம் ஒவ்வொருவரும் தொடங்குகிறோம். இவை எல்லாமே நல்ல எண்ணங்கள். தான் மட்டுமல்ல, பிறரும் நன்றாக வாழ வேண்டும் என்று நினைக்கும் நல்ல எண்ணங்கள். 'மனித வாழ்க்கை மிக எளிமையானது. அந்த வாழ்க்கைக்கு நாம் என்ன கொடுக்கிறோமோ அதையே நாம் பெறுகிறோம்' என்பது உளவியல் அறிஞர்களின் கூற்று. நாம் நம்மைப் பற்றி என்ன நினைக்கிறோமோ. அதுவே நம் வாழ்வில் உண்மையாகின்றது. நமது வாழ்வில் நடக்கும் நல்லவை தீயவை பலவற்றுக்கும் நாமேதான் பொறுப்பு. நாம் நினைக்கும் ஒவ்வோர் எண்ணமும் நமது வருங்காலத்தை உருவாக்குகின்றது. நமது எண்ணங்களாலும் உணர்ச்சிகளாலும் நமது அனுபவங்களை உருவாக்குகின்றோம். நாம் நினைக்கும் எண்ணங்களும், நாம் பேசும் வார்த்தைகளும் நமது அனுபவங்களை உருவாக்குகின்றன. நமக்கு ஏற்படும் சூழ்நிலைகளையும் நாமேதான் உருவாக்குகின்றோம். எந்த மனிதரும், எந்த இடமும், எந்தப் பொருளும் நம்மீது அதிகாரம் கொண்டவை அல்ல. ஏனெனில், அவைபற்றிச் சிந்திப்பவர்கள் நாமேதான், வேறு யாருமல்ல. அமைதி, நல்லுணர்வு, இதமான சூழல், சமநிலை ஆகியவை நமது மனதில் உருவாகும்போது, அவற்றை நம் வாழ்வில் காண்போம். எனவே நல்லதையே நினைப்போம். நல்ல எண்ணங்களையே மனதில் வளர்ப்போம். நல்லதே நடக்கும் என நம்புவோம். ■

ஜே. பத்திநாதன்

# வேண்டுகின்றோம் கேட்டருளும்...

தந்தை இறைவனே – தந்தை இறைவனே
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்
தந்தை இறைவனே

1. திரு ஏக வேந்தனே உலகாளும் தேவனே
உம்மையாம் பணிகின்றோம்
திருத் தந்தை ஆயர் குலத்தோரைக் காத்திட
உமதருள் வேண்டுகின்றோம்
மறைதனை வளர்த்திட நிறைவான பணியாற்றும்
துறவறத்தோர்களையும்
கறையில்லா நிறைவாழ்வில் நித்தமும் காத்திட
உமதருள் இறைஞ்சுகின்றோம். – தந்தை ... –

2. மீனது தேனது வழிந்தோடும் மட்டுமாநிலத்தினையே
தனிமறை மாநிலம் ஆக்கிட அருள் கூர்ந்த
அண்ணலே எம் இறைவா!
யோசேவாஸ் அருளாளர் பணியினால் பலம் பெற்ற
மாந்தரை வழிநடத்த
யோசேப்பு ஆயரை நல்கிட்ட தயவுக்காய்
வாழ்த்தி நாம் போற்றுகின்றோம் – தந்தை .... –

3. மறைக்கல்வியாண்டிலே திருப்பங்கள் ஏற்பட்டு
ஞானத்தில் அனைவருமே
குறைவற்ற வளர்ச்சியை அடைந்திந்த ஞாலத்தில்
சிறப்புறத் திகழ்ந்திடவும்
தட்டுங்கள் திறந்திடும் தேடுங்கள் கிடைத்திடும்
என்றவா வேண்டுகின்றோம்
தாராள அறிவினை அனைவர்க்கும் மறைவாழ்வில்
அருள்வாய் நீ வல்ல தேவா – தந்தை .... –

4. ஆண்டவன் வழிதன்னில் வாழ்ந்திடும் எங்கள்
இறை மக்கள் அனைவரையும்
அன்னையின் ஈர்ப்பினால் அண்டி வருகின்ற
ஏனைய மக்களையும்
குறைவற்ற வளமீந்து அருளீந்து பொருளீந்து
நிறைவாழ்வழிப்பீர் தேவா
குன்றின் மீதேற்றிய தீபம் போல் மிளிர்ந்திட
வழிகாட்ட வேண்டுமையா – தந்தை .... –

“வடிவங்கள் மாறலாம், சம்ஹாரம் தொடரும்”

என்ற கவிதைவரி மனதில் பளிச்சிட்டு மறைகின்றது. மண்டைபுரமெங்கும் மலை மலையாய் மண்டையோடுகள் குவிந்திருந்தன. வடபுறமாக இமயமலைத் தொடர்போல மிகப் பெரும் குவியல்கள் நாற்றமெடுத்துக்கொண்டிருந்தன. அவற்றிடையே அடையாளப்பலகைகூட நடப்பட்டிருந்தது. அது கள்ளிவாய்க்கால் என்ற பெயரைக் காட்டிற்று. அந்த மண்டைகள் உடைந்தும், உடைக்கப்பட்டும், துளைகள் நிறைந்தும், பெரிதும் சிறிதுமாகக் கிடக்கின்றன. மண்டைபுரத்தில் அண்மைக்காலமாக வேலை குறைந்து போய்விட்டதால் விசேட கூட்டமொன்று கூட்டப்பட்டது. இராஜதந்திர வல்லுனர்கள், நவீன ஆலோசகர்கள் பலர் வழங்கிய குறிப்புரைகள் தொகுக்கப்பட்டு கபால குப்தனால் படிக்கப்பட்டு கலந்துரையாடல் நடைபெற்று முக்கிய சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றுள் முக்கியமானது மண்டைபுரத்திற்கு புதிய பணியாளர்களை உள்வாங்குவது என்பதும் தற்போதைய ஊழியர்களுக்கு தந்திரோபாய செய்முறைசார் பயிற்சிகளை வழங்கி அவர்களிடையே வாண்மை விருத்தியை ஏற்படுத்துவது என்பதாகும். புதிய பணியாளர்களுக்கான தகைமைகள் முன்மொழியப்பட்டன.

**1.** மக்களின் பொதுப்பணத்தில் பல வருடங்கள் படித்துப் பட்டம் பெற்றவர்களாயிருத்தல் வேண்டும்.

மேலே 01ல் குறிப்பிடப்படும் தகைமையில் பொதுப்பட்டத்திற்கு மேலதிகமாக துறைசார் தகைமை இருப்பின் விசேட கவனம் செலுத்தப்படும்.

**2.** பொதுமக்களுக்காக இலவசமாக சேவை வழங்கும் நிலையங்களில் பணியாற்றினாலும் கையொப்பத்தைக் கிறுக்கி விட்டு பணம்பிடுங்கும் தனியார் நிலையங்களை நிறுவி அல்லது அவற்றில் இணைந்து பணியாற்றும் துடிப்பு இருக்கவேண்டும்.

**3.** சாந்தமான முகமும், வசீகரமான மென்மையான பேச்சும் வருவோரை ஏமாற்றிப் பணம் பிடுங்கும் சாமர்த்தியமும் கட்டாயம் எதிர்பார்க்கப்படும்.

**4.** முக்கியமாக கடவுள் பெயர்களோ, புனிதர்கள், மகான்கள் பெயர்களோ அறிஞர்கள் ஆன்மீகவாதிகளின் பெயர்களையோ கொண்டிருப்பது விசேட தகைமையாகக் கருதப்படும்.




**5.** பணம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயற்படும் தன்மை. இரக்கம் மனிதநேயம் கருணை கிஞ்சித்தும் இல்லாத சுபாவம், இவைகள் சிறப்புத் தகைமைகளாகும்.

**குறிப்பு :** இப்பணியாளர்களுக்குத் தனித்துவமான சீருடை வழங்கப்படமாட்டாது. பொது மக்களிடையே சேவையின் செம்மல்களாக நடித்துக் கொண்டே மண்டைபுரத்திற்கு மண்டைகளை அனுப்பும் கைங்கரியத்தை கச்சிதமாகச் செய்யவேண்டும்.

இவ்வாறாக, அந்த விளம்பரம் நீண்டு காணப்பட்டது. இதன் அடிப்படையில் திரட்டப்பட்டவர்களில் மண்டைபுரத்தின் மிக விசுவாசியான ஊழியர் அருட்குமார். வெள்ளையடிக்கப்பட்ட கல்லறையென்றோ, கட்டுவிரியன் குட்டியென்றோ, சாத்தானின் மூத்த சகோதரன் என்றோ

எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம்.

அதிகாலையே வந்து, இலக்கத்துண்டு வாங்கி, இடுப்பு வலி கால்வலிகளுடன் தவமிருக்கும் கர்ப்பிணிகள் ஏனோ தானோவென்று சோதிக்கப்பட்டு அனுப்பப்படுகிறார்கள். தனது தனிப்பட்ட நிலைய விசிட்டிங் அட்டையை கொடுத்து நாள் நேரம் கூட குறித்து அனுப்பிக் கொண்டிருந்தார். இங்கு இரண்டு நிமிடம் கூட சோதிக்காதவர் முற்பணம் செலுத்தி பதிவுசெய்து உள்வரும்போது அன்பொழுகப்பேசி, அறிவுரைகள் கூறி, தொடர்ச்சியாக தனது நிலையம் வருவதன் அவசியத்தை தெளிவித்து பிரசவ பயத்தை நீக்கி தைரியம் கொடுத்து அப்பப்பா .... பணம் ... பணம்... இந்தப் பணம் மண்டைபுரம் வரை பாயும்.

அன்று கணவனுடன் அவள் வந்தாள். தாயோ தந்தையோ உடன்பிறந்தவர் யாருமோ இல்லை. மேரியம்மாவின் செட்டைக்குள் வளர்ந்தவள். அவள் ஓர் ஆசிரியை. ஒன்பது மாதங்களுக்கு முன்னால் பெருமலையைச் சேர்ந்த ஒரு நல்ல இளைஞனுக்குக் கைபிடித்துக் கொடுத்தாள் மேரியம்மா. கணவன் இடமாற்றம் எடுத்து அவளைக் கூட்டிப்போய் கனிவாகப் பார்த்துக் கொண்டான். கணவனின் தாய் தந்தை சகோதரிகள்கூட அவளை அரவணைத்துக் கொண்டனர்.

கர்ப்பிணிக்கான தேவைகள், வேதனைகளின்போது கணவன் அவளை கண்போன்று கவனித்தான். வாய்க்கு ருசியாக பழங்கள், பண்டங்கள் மட்டுமல்ல பெருமலையில் மண்டைபுரத்துப் பணியாளரை மாதா மாதம் சந்தித்து மருந்துகள், மாத்திரைகள், சத்தான மருந்துகள் என்று ஏகப்பட்ட கவனிப்பு. பெற்றவள் கழுத்தை நெரித்து புதைத்துவிடக் காத்திருந்த வேளையில் குழந்தையை எடுத்துவந்து வளர்த்து ஆளாக்கியவள் மேரியம்மா. தனது தலைப்பிரசவம் மேரியம்மாவிடம் இருக்கவேண்டுமென

> "பாவம் செய்யும் எண்ணம் மனதில் எழுந்ததுமே அதை இந்த நிமிடமே விலக்கிவிடுங்கள். மனதில் ஒருமுறை பாவம் புகுந்துவிட்டால் அது அங்கிருந்து எளிதில் வெளியேறாது. எப்போதாவது நாம் பாவம் செய்துவிட்டோமானால் உடனே பகவானிடம் அழுது கெஞ்சி அதை மன்னிக்கும்படி பிரார்த்திக்க வேண்டும்"

அவள் ஆசைப்பட்டாள். கணவனும் பெருமலையிலிருந்து இருநூற்றி நாற்பது கிலோ மீற்றர்களுக்கு அப்பால் இளைய மகளுடன் வாழ்ந்த மேரியம்மாவிடம் கூட்டி வந்தான். இங்கு அரியசேவை செய்துகொண்டிருந்ததோ மண்டைபுரத்து விசுவாசி அருட்குமார்.

"இன்னும் ஐந்து நாளில் பிரசவம் நிகழும். சாதாரண பிரசவமே நல்லது. வெட்டியெடுப்பது வேண்டாம். மாத்திரைகள் தருகிறேன். நாளை மறுதினம் வரவேண்டும்"

அடுத்தடுத்த நாட்களில் பணம் செலுத்தி பரிசோதித்து இத்தகைய வார்த்தைகளையும் வழிகாட்டல்களையும் கேட்டதில் பெருமளவு பயம் அற்றுப் போயிருந்தது. அளவுக்கதிகமான நம்பிக்கையுடன் வெளியேறினர்.

முற்பதிவுக் கட்டணம் மட்டும் இரண்டாயிரம் ரூபா.

"இண்டைக்கு ஊசி போடுவம். நாளைக்கு காலையே டெலிவரிக்காக அட்மிட் ஆகிருங்க"

ஊசியும் போடப்பட்டது. கூட்டம் அதிகமாக இருந்தது. ஆற அமர சோதிக்கவோ பெரிய வயிறு, பெரிய குழந்தையா, இரட்டைக் குழந்தையா இதைப் பற்றியெல்லாம் சிந்திக்க நேரமிருக்கவில்லை. கர்ப்பப்பை சுருங்கி பிரசவ நோவு ஏற்படவே ஊசி மருந்து ஏற்றப்பட்டது. இரவானது வயிற்றில் அமைதி பரவியதை உணர்ந்தாள். குழந்தையின் துடிப்பு மெல்ல மெல்ல அமைதியாக பயம் அவளைக் கௌவிக் கொண்டது. அழுதாள். கடவுளைக் கையெடுத்து வேண்டியபடியே அதிகாலையே போனாள். நேரம் வந்தபோது அருட்குமார் வந்தார். பார்த்தார்.

"மை கோட்... பேபி டைட்..." சென்றார்.

"ஏன்... ஏன்... ஏன்.... என்ன நேர்ந்தது..."

ஓவென்று ஓங்கியழுதாள். அரற்றினாள். மூன்று நாட்கள் தனியறை, மேரியம்மா மட்டும். மூன்றாம் நாள் மேரியம்மாவும் வெளியேற்றப்பட்டாள். நள்ளிரவு ஒன்று முப்பது. மாடு வெட்டும் புச்சர் கைகளில் கத்தியுடன் கிளம்பினான். அவளின் அலறல் அப்பிரதேசத்தையே அதிர வைத்தது.



சுமார் இரண்டு மணித்தியாலங்களாக அலறல்....! அழுகை...! வேதனை....! விம்மல்.....! முனகல்....! மூச்சிழுப்பு ஓய்ந்து போனது. கையுறையை கழற்றியபடியே அருட்குமார் வந்தார்.

"எனது கைகள் நடுங்குகின்றன. எத்தனையோ துயரங்கள் வாட்டியபோதும் கலங்காத எனது கண்கள் இப்போ கண்ணீரை அருவியாக்குகின்றன. நெஞ்சு பதைபதைக்க அடிவயிறு பதறுகிறது. அந்தப் பாலகன் அமைதியாக என்னிரு கைகளில் கிடக்கிறான். தலையில் ஆயுதம் அழுத்தி வெட்டிய இரத்தக் காயத்தால் சுடச்சுட இரத்தம் வடிகிறது. வலது தோள்பட்டையில் முதுகில் பல காயங்கள். அற்புதமான அழகான முகம். குண்டு குண்டுக் கண்கள். நாலு கிலோ இருநூற்றி எண்பது கிராம். முகப்பவுடரை கைகளில் கொட்டி அந்த மழலை மேல் பூசி அழகான சட்டைகளை ஒன்றன்மேலொன்றாக அணிவித்து பிஞ்சுக் கால்களில் பஞ்சு நூலால் பின்னிய குட்டிச் சப்பாத்துக்களை அணிவித்தபடியே நிமிர்ந்த என் மூத்த அக்கா விம்மி விம்மி அழுகிறாள். கால்மாட்டில் தங்கை மறுபுறம் மற்ற அக்கா ஓங்கி அழுகின்றனர்".

பிரேத அறைப்பணியாளனின் கூற்றுப்படி கடந்த ஒரு வாரத்தில் ஐந்தாவது குழந்தையிது. அடர்ந்த வாழைப்பாத்தியிடையே ஆழமாக வெட்டிய அழுக்கு மண்குழியில் பெட்டியை வைக்கிறேன். அந்த மழலை முகம் ஏதோ சொல்லிக் கெஞ்சுகிறது.


"கர்ப்பப்பை சுருங்கி பிரசவம் நிகழவென ஏற்றப்பட்ட ஊசி மருந்தினால் கர்ப்பப்பை சுருங்கியது. மூக்குத்துவாரத்தையும், வாயையும் அப்பிக்கொண்டது. இறுக்கம். மெல்ல மெல்ல நான் மயக்கமானேன். என்னை இரவுதான் கொன்றார்கள். இதோ பாருங்க மாமா சுடச்சுட ஒழுகும் இரத்தம். என் பெயர் என்ன மாமா...? நான் என்ன பாவம் செய்தேன் மாமா...?"

அந்தப் பாலகனின் அவலக்குரல் என் செவிப் பறையில் கேட்கிறது. நெற்றியில் பெருவிரலால் சிலுவை அடையாளம் வரைந்து பெட்டியை மூடியபடி தலையை நிமிர்த்த அவன் மண்ணைப் போட்டு மூடுகிறான். மண்டைபுரத்திற்கு புத்தம்புதிய பிஞ்சு மண்டையொன்றை அனுப்பி விட்டார் அருட்குமார். மண்டைபுரத்து முதல்வருக்கு மட்டற்ற மகிழ்ச்சி. கபால குப்தன் மூலமாக பாராட்டும் வழங்கப்பட்டது. மீண்டும் இன்ரநெற் வழியே மண்டைபுரத்திற்கான புதிய பணியாளர்களைத் திரட்ட விளம்பரம் விடுக்கப்பட்டாயிற்று. அருட்குமார் பாதையில் செல்ல விரும்புவோர் விண்ணப்பிக்கலாம்.

■

# இன்றைய பாலியல் துஷ்பிரயோகங்களுக்குக் காரணம் யார்...?





~ ஜெயலஷ்மி சசிராஜா M. Com. ~

பெற்றோர் பிள்ளைகளையிட்டு கடுமையாகக் கவனம் செலுத்தவேண்டிய காலமிது. எந்த ஊடகத்துறையை நோக்கினாலும், பாலியல் வன்முறை தொடர்பான செய்திகளே காணப்படுகின்றது. 6 வயது முதல் 15 வயதிற்கு உட்பட்ட சிறுமிகள் திசை திருப்பப்பட்டு, பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டு, இறுதியில் கொலைசெய்யப்பட்டு, சாக்கடை நீர்த்தேக்கங்களில் வீசப்படுகின்றார்கள், அல்லது பற்றைகளுக்குள் வீசப்படுகின்றார்கள்.

பொலிசார் சட்ட நடவடிக்கை எடுக்க முன்பு பெற்றோர் சரியான பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும். சிறுவர் உரிமைகள் பற்றிய பல்வேறு பிரகடனங்களும், சட்டங்களும் ஏடுகளில் மிகப் பாதுகாப்பாக இருப்பது சிறுவர்களுக்கே தெரியாது. பெரியோர்களும், பெற்றோர்களும் கூட அதைப் பெரிதுபடுத்துவதில்லை.

சிறுவர் உலகம் மிக அழகானது, கள்ளம் கபடம் இல்லாதது, சுதந்திரமாகச் சுற்றிவர ஆசைப்படுவது, "வெளுத்ததெல்லாம் பால் என்று நினைப்பது". இவ்வாறான சிறுவர்களுக்குப் பின் விளைவுகள் என்னவென்று விளங்காது.

ஏன் இன்றைய பெற்றோர், பெரியோர்க்குக் கூட "சிறுவர் துஷ்பிரயோகம்" என்றால் என்ன? என்ற பூரண விளக்கம் கிடையாது. சிறுவர் துஷ்பிரயோகம் என்பது, "சிறுவர்களை உடலியல், பாலியல் மற்றும் உணர்வுகள் ரீதியாக பிழையான நடத்தைக்குட்படுத்தி மானசீகமாக அவர்களை வதைத்து, அவர்களது அபிலாசைகளில் மண்ணை அள்ளிப்போடுவதே ஆகும்".

அனேகமான துஷ்பிரயோகங்கள் சிறுவர் இல்லங்களிலேயே இடம்பெற்றாலும் கூட, பாடசாலைகளிலும், வீடுகளிலும், சமூகங்களிலும் கூட இவை இடம்பெறுகின்றன. பொதுவாக சிறுவர் துஷ்பிரயோகத்தை நான்கு வகையாக நோக்கலாம்.

1. புறக்கணித்தல்.
2. உடல் ரீதியான துஷ்பிரயோகம்.
3. உளவியல் ரீதியான துஷ்பிரயோகம்.
4. பாலியல் ரீதியான துஷ்பிரயோகம்.

புறக்கணித்தல் என்று கூறும்போது, உணவு, உடை, கல்வியறிவு, ஒழுக்கம், மருத்துவம், சுகாதாரம், போஷாக்கு, விளையாட்டு, உளவிருத்தி, ஆளுமை வளர்ச்சி, சுயகணிப்பீட்டுத் தேவை என்பவற்றை நிறைவுசெய்யாதுவிடல்; அன்பு, பாசம் இவற்றை அவர்களது எதிர்பார்க்கைகளுக்கேற்ப வழங்காது விடல்; கருத்துகளை வெளிப்படுத்தவிடாது, அடக்குமுறைகளைக் கையாள்வது என்பன இதில் அடங்கும்.

உடலியல் ரீதியான துஷ்பிரயோகம் என்று கூறும்போது இது உடலியல் ரீதியான ஆக்கிரமிப்பைக் குறிக்கும். அதாவது, சிறுவர்களை அடித்தல், காயப்படுத்தல், சூடுவைத்தல்,



அவர்களால் செய்யமுடியாத கடினமான வேலைகளை வற்புறுத்திச் செய்வித்தல், பாடசாலைக்குச் செல்லவிடாது, அவர்களை அடிமைப்படுத்தி வேலை வாங்குதல் என்பனவாகும்.

உளவியல் ரீதியான துஷ்பிரயோகம் என்பது ஒரு பிள்ளையின் உள்ளம் பாதிப்படையும் வகையில் நடப்பதையே குறிக்கின்றது. அவர்களது உள்ளம் பாதிக்கும் வகையில் கடுமையாகப் பேசுதல், மட்டந்தட்டுதல், பிறர் முன்னிலையில் அவர்களை அவமதித்து எள்ளி நகையாடல் போன்றவற்றைக் கூறலாம்.

பாலியல் துஷ்பிரயோகம் என்று கூறும் போது, சிறுவர்களைப் பாலியல் ரீதியாக பிழையான நடத்தைக்குட்படுத்துவதையே இது குறித்து நிற்கின்றது. ஆபாசப் படங்களைப் பார்க்கத் தூண்டுதல், பாலியல் உணர்வைத் தூண்டி வல்லுறவு கொள்ளல், மிருகத்தனமாக நடத்தல். இவ்வாறான துஷ்பிரயோகங்களே இன்று அடிக்கடி பரவலாக மலிந்து காணப்படுகின்றன.

மேலும், இந்த அடிப்படையான நான்கு வழிகளிலேயே சிறுவர் துஷ்பிரயோகங்கள் பரவலாக இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு அடிப்படைக் காரணம் பெற்றோரே ஆகும். பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு உணவு, உடை, உறையுள் போன்றவற்றைக் கொடுத்தால் மட்டுமே போதுமானது என்று நினைக்கிறார்கள். இவர்கள் தமது பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டியது மிகுந்த பாதுகாப்பாகும். படிப்பை விடப் பாதுகாப்பு அத்தியாவசியமாகும். சிறுவர்கள் கள்ளம்கபட மற்றவர்கள். பின்விளைவுகளை புரிந்துணர முடியாதவர்கள். முதலில் பெற்றோரும், பெரியோரும் விழிப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும்.

**அனாவசியமாக ஆடவர்கள் அடிக்கடி வீட்டிற்கு வருவதும், அன்பளிப்புகளைக் கைநிறைய எடுத்து வருவதும், சிற்றுண்டிகளைப் பொதிபொதியாகச் சுமந்துவருவதும் ஆரம்பத்தில் ஆனந்தமாகத்தான் இருக்கும். கசாப்புக் கடைக்காரன் ஆட்டிற்கு அதிகமாகத் தீனி இட்டு ஆதரிப்பது, ஆட்டின் மீதுள்ள அன்பினால் அல்ல, தனது சுயநலன் கருதியே; மறந்து விடாதீர்கள்.**


ஆடவர்கள் பிள்ளைகளைக் கட்டிப் பிடித்து சேட்டைகள் விடுதல், முத்தமிடல், மடியில் இருத்தி சேட்டைகள் விடல் இவற்றை ஒருபோதுமே அனுமதிக்காதீர்கள். ஆரம்பத்திலேயே முற்றுப்புள்ளியிடுங்கள். பிள்ளைகளைத் தனியாக வீட்டில் விட்டுச் செல்லாதீர்கள். எவரையுமே நம்பித் தனியே அனுப்பாதீர்கள்.

அடுத்து, இளைஞர்களை கம்பியூட்டர், வெப்சைட், இணையத்தளங்கள், இன்டர்நெற் ..

→

குறும்(ப்)பா~106

சிட்டங்கள் பேசாதே கவனம்
திட்டங்கள் போடாதே மரணம்
சாதிமத மொழியுரிமை தனித்துவம் எதற்கடா...?
சுதந்திரம் பெற்றோம் நாம் புதினம்?.....!




~ மலர் ~


# வெள்ளிவிழா வாழ்த்து

நல்லாயன் சபைத் துறவியான அருள்சகோதரி நவமணி அவர்கள் கடந்த டிசம்பர் 22ம் திகதி தமது பணி வாழ்வில் இருபத்தியைந்து ஆண்டுகளை நிறைத்து வெள்ளிவிழாக் கண்டார். 2004 முதல் 2010 வரையான காலப்பகுதியில் நமது மறைமாவட்டத்தில் பணிபுரிந்த அருள்சகோதரி அவர்கள் சுனாமிப் பேரிடர்களுக்கு மத்தியில் அரும்பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

வாழைச்சேனை நல்லாயன் கன்னியர் இல்லத்தில் தலைவியாக (Superior) பணி புரிந்ததோடு பல்வேறு அபிவிருத்திச் செயற்பாடுகளில் ஆர்வங் காட்டினார்.

வெள்ளிவிழாக்கண்ட அருள்சகோதரி அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் பணிவாழ்வு சிறக்க இறைஆசீர் இறைஞ்சுகின்றோம்.






→

தொடர்புகள் என்பன திசைதிருப்பியுள்ளது. இன்று செல்போன்களிலும் ஒன்லைன் கனெக்ஷன் உண்டு. பெற்றோரின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு இளம் தலைமுறையினர் இன்டர் நெற்றில் ஆபாசப் படங்களைப் பார்த்துவிட்டு காமக்கொந்தளிப்பால் தமது வாழ்வை நரகமாக்கு கிறார்கள்.

போதைப்பொருட்களால் வேறு இன்பங் காணத்துடிக்கிறார்கள். இவர்களது இளமைக் கொந்தளிப்புகளை முதலில் பெற்றோர்கள் இனங்கண்டு, சீராக வழிநடத்தத்தவறினால் முறை கேடான பாலியற் துஷ்பிரயோகத்தால் நாடு குட்டிச்சுவராகிவிடும்.

புரிந்துணர்வு, கட்டுப்பாடு, கண்காணிப்பு, விழிப்புணர்வு, சீரான தொடர்பாடல், ஒழுக்க நெறிகள் என்பனவற்றைப் பிள்ளைகள் மட்டில் பெற்றோர்கள் கடைப்பிடிக்கவேண்டி உள்ளன. பெற்றோரும் பிள்ளைகளுக்கு முன்மாதிரிகையாக நடக்கவேண்டும். தாயும், தகப்பனும் மதுபோதைக்கடிமையானால், பிள்ளைகளின் எதிர்கால வாழ்வு குட்டிச்சுவராகிவிடும். எதிர்காலச் சமூகத்தை சீர்குலையாது காக்க வேண்டுமானால் பெற்றோர், பெரியோர்களின் விழிப்புணர்வு மிகமிக அவசியமானதே. ●




கத்தோலிக்கரான நாம் புனிதர்களுக்கு வணக்கம் செலுத்துகிறோம். அவர்கள் மானிடராகப் பிறந்து வாழ்வாங்கு வாழ்ந்ததால் விண்ணகத்தில் இறைவனுடன் வாழும் பேறுபெற்றவர்கள். எமக்காக இறைவனிடம் பரிந்துரை செய்பவர்கள். அவர்களது வாழ்வைப் பின்பற்றி வாழ நாம் விரும்பினால் அப்புனிதர்களது வாழ்வைப் பற்றி அறிந்திருப்பது அவசியம். எம்மில் பலருக்கும் ஒவ்வொரு நாளுக்கு மான புனிதர்கள் பற்றிய விபரங்கள் தெரியாது. இவர்களின் வரலாறும் தெரியாது. எனவே, இதற்கு தவியாக ஒவ்வொரு மாதமும் அதற்கான நாட்காட்டியும், புனிதர்களின் வரலாறும் உங்களை நாடி வருகிறது. அறிந்து பயன்பெற வாழ்த்துகிறோம்.

**மாசி மாதம் – 203**

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 புனித பிரிஜிட் | 2 இயேசுவின் காணிக்கை விழா |
| 3 புனித அன்ஸ்கர் புனித பிளாசி | 4 இலங்கை மாதா புனித வரோனிக்கா | 5 புனித அகத்தா | 6 புனித கொன்சடீலா காசியா புனித போல் மிக்கியும் தோழரும் | 7 புனித றொமுவால்ட் புனித றிச்சர்ட் | 8 புனித ஜெரோம் எமி. லியானி | 9 புனித அப்பலோனியா புனித அலெக்சாந்திரியா சிறில் |
| 10 புனித ஸ்கொன்டிக்கா | 11 புனித லூர்த்து அன்னை | 12 புனித டேமியன் புனித சிற்றனினசும் தோழரும் | 13 புனித யூலியன் புனித கத்தரின் டி ரிக்கி திருநீற்றுப் புதன் | 14 புனித சிறிலும் மெதோடியசும் புனித வலன்டைன் | 15 புனித குளோட் டிலாகொலம்பில் | 16 புனித யூலியானோ புனித வன்சிமஸ் |
| 17 புனித மரியாவின் ஊழியர்கள் | 18 புனித சிமியோன் புனித மாரி வேணடேற் சோபிரஸ் | 19 புனித பொனிபஸ் புனித கொன்ரட் | 20 புனித யூகரியுஸ் | 21 புனித பீற்றர் டேமியன் | 22 திருத்தூதர் பேதுருவின் தலைமைப் பீடம் | 23 புனித பொலிகார்ப் |
| 24 புனித செசாரியூஸ் புனித எதேல்போர்ட் | 25 புனித டராசியூஸ் | 26 புனித விக்டர் புனித போர்பிரியூஸ் | 27 புனித இரேனா புனித வியாகுல அன்னையின் கபிரியேல் | 28 புனித இலரியா புனித ரோமானுஸ் | | |


# புனிதர் வரலாறு



## மாசி - 01 புனித பிரிஜட்

அயர்லாந்து நாட்டின் இரண்டாம் பாதுகாவலரான இவர் 450ம் வருடத்தில் டன்டோக் எனும் நகருக்கருகிலிருக்கும் லூத் எனும் ஊரில் பிறந்தார். புனிதரான பற்றிக்கின் கரங்களால் திருமுழுக்கு வழங்கப்பட்டார். புனிதமும், அழகும் நிறைந்த இவர் இளம்பெண்ணா னதும் தன் இளமையைக் காக்க, திருமணத்திலிருந்து தப்ப இறைவனிடம் தனது அழகை எடுத்துவிடும்படி கேட்டுத் தன்னைத் துறவற வாழ்வுக்கு வழிநடத்த மன்றாடினார் என்று இவரைப்பற்றிக் கூறப்படுகிறது. துறவறத்திற்குரிய தலைமுக்காட்டைப் புனித மெல் என்பவரிடம் பெற்றுக்கொண்டார். அயர்லாந்தின் சில்தாரா எனுமிடத்தில் முதலாவது இல்லத்தை ஆரம்பித்தார். பல வருடங் களாக இதன் தலைவியாகக் கடமையாற்றினார். காலப்போக்கில் அயர்லாந்தின் ஏனைய பகுதிகளிலும் இத்தகைய இல்லங்களை ஆரம்பித்தார். இவரது செபம், இவர் மூலம் நிகழ்ந்த புதுமைகள் ஆகியன ஆதிகால அயர்லாந்துத் திருச்சபையை வளர்க்க உதவின. இவர் பரந்த மனப்பான்மையும், உற்சாகமும், ஆர்வமும் சுறுசுறுப்பும் நிறைந்தவர். ஏழைகளுக்கும், தேவையில் உள்ளோருக்கும், துன்பப்படுவோருக்கும் உதவுவதில் விருப்புக்கொண்டவர். ஒரு தடவை இவருக்கு ஒரு நண்பர் அப்பிள் பழங்கள் நிறைந்த கூடையைக் கொடுத்தார். இவர் அவற்றை நோயாளர் மத்தியில் பகிர்ந்தளித்தார். இதைக் கண்ட நண்பர் அவை அவர்களுக்கல்ல; உங்களுக்கு மட்டுமே எனச் சத்தமிட்டார். அதற்கு அவர் எனக்குரியவை எல்லாம் இவர்களுக்குரியவையே எனப் பதிலிறுத்தார். 523ம் வருடம் இவர் மரித்துப் புனிதர்களான பற்றிக், கொலம்பா ஆகியோரை அடக்கம் பண்ணிய டவுன் பற்றிக் எனுமிடத்திலுள்ள கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டார்.

## மாசி - 04 புனித வரோணிக்கா



இவர் ஜெருசலேம் வாழ் பக்திமிகு பெண்மணியாவார். திருச்சிலுவைப் பாதையின் ஆறாம் ஸ்தலத்தில் சிலுவை சுமந்து வந்த இயேசு பெருமானின் திருமுகத்தைத் துணிகொண்டு துடைத்த தால் பேறுபெற்றவள். இத்தாலிய பழைய குறிப்புகளின்படி வரோணிக்கா, இயேசுவைத் துடைத்த துணியால் திபேரியுஸ் சக்கரவர்த்தியை நோயினின்று குணப்படுத்தினாரெனவும், பின்னர் இத்துணி பரிசுத்த பாப்பரசர் கிளமென்டிடம் பாதுகாப்புக்காக ஒப்படைக்கப்பட்டுத் தொடர்ந்து வருவோரால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. ஒரு பிரான்சிய வரலாற்றுக் குறிப்பின்படி மனமாற்றம் பெற்ற பிரான்சியரான சக்கேயுஸ் என்பவரை மணந்து ரோமில் வாழ்ந்தாரெனவும், பின் துறவியாகி ரொகாமடோர் எனுமிடத்தில் அவரைவிட்டுப் பிரிந்தாரெனவும் அறியமுடிகிறது. புனித கன்னிமரியாவின் புனித பொருட்களை சோலக் எனுமிடத்திற்குக் கொண்டு வந்து பிறருக்கு உதவச் செய்தார். அங்கேயே மரித்தார். இவருக்கிருந்த நோயை இயேசு குணப்படுத்தியதாகவும் சிலர் கூறுகின்றனர்.

தொடரும் ....




எமது நூலக நிறுவனம், 2013ம் ஆண்டில் தனது எட்டாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தனது ஆண்டு விழாவுடன் கூடியதாக "தமிழ் ஆவண மாநாடு 2013" ஐயும் நடாத்தவிருக்கின்றது. "ஈழத்துத் தமிழ்ச் சூழலில் ஆவணப் படுத்தலும் பேணிப் பாதுகாத்தலும்" எனும் தொனிப்பொருளில் நடைபெறவுள்ள இம்மாநாடு எதிர்வரும் 2013 ஏப்ரல் மாதம் 27 மற்றும் 28ம் திகதிகளில் நடைபெறும். தங்களது துறைசார்ந்த ஆய்வுக்கட்டுரையை இம்மாநாட்டிற்காகச் சமர்ப்பிப்பதன் மூலம் மாநாட்டினைச் சிறப்பிக்குமாறு தங்களைக் கோருகின்றோம். கீழ்வரும் விடயப்பரப்புகளுக்கு அமைவான ஆய்வுக் கட்டுரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**ஆய்வுக் கட்டுரைகளுக்கான விடயப்பரப்புகள் :**

1. வரலாறு, தொல்லியல் ஆவணங்களும் மரபறிவுப் பதிவுகளும்
2. ஒலி, ஒளி, புகைப்பட ஆவணங்கள்
3. தனிமனித ஆளுமைகள், நிறுவனங்கள்
4. சமூகத்தை ஆவணப்படுத்தல்
5. மொழி இலக்கியப் பதிவுகள்
6. அறிவுப் பகிர்வும் கல்வியும்
7. ஆவணப்படுத்தலில் தொழினுட்பப் பயன்பாடுகள்.
8. எண்ணிம நூலகங்கள் [Digital Libraries], இணையத் தளங்கள், தரவுத் தளங்கள்
9. நூல் விபரப் பட்டியலும் நூலக வியலும்
10. கலை, பண்பாடு நினைவுகளும் ஆவணப் படுத்தலும்

400 சொற்களுக்கு மேற்படாத வண்ணம் அமையப் பெற்ற, ஆய்வுக் கட்டுரைகளுக்கான முன்வரைவுகளை 15.01.2013க்கு முன்னதாக எதிர்பார்க்கின்றோம். இவை தமிழ் ஒருங்குறி (Unicode) எழுத்துருக்களில் தட்டச்சிடப்பட்டு மின்னஞ்சலில் (noolahamfoundation @gmail.com) அனுப்பப்படுவது விரும்பத்தக்கது. அதேவேளை தபால் மூலமாகவும் அனுப்பலாம். தெரிவு செய்யப்பட்ட முன்வரைவுகளுக்கான ஆய்வுக் கட்டுரைகள் தமது இறுதி வடிவத்துடன் 01.03.2013 அன்று அல்லது அதற்கு முன்னர் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். ஆய்வுக் கட்டுரைகளின் இறுதி வடிவம் 5000 சொற்களுக்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும்.

மாநாட்டு அமர்வுகளில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் அனைத்துக் கட்டுரைகளும் நூலக நிறுவனம் தனது ஆண்டு விழாவில் வெளியிட உள்ள ஆய்விதழில் இடம்பெறும். கட்டுரையாளர்கள் மற்றும் பதிவுசெய்த பங்குபெறுவோர் அனைவருக்கும் மாநாடு நடைபெறும் நாட்களில் மாநாட்டு சிறப்புமலர், வெளியீடுகள், கோப்புகள் போன்றவை வழங்கப்படும். மாநாடு தொடர்பான அனைத்து விபரங்களையும் நூலக நிறுவனத்தின் இணையத்தளத்தில் (www.noolaham foundation.org) இருந்து பெற்றுக்கொள்ளலாம். முழுப்பெயர், மின்னஞ்சல், வதிவிட முகவரி ஆகிய விபரங்களுடன் ஆய்வுக்கட்டுரைகளுக்கான முன்வரைவுகள், கட்டுரைகள் ஆகியவற்றை அனுப்புதலுக்கும் பிற தொடர்புகளுக்கும் கீழுள்ள முகவரியை உபயோகிக்கலாம்.


'Noolaha Niruwanam'
No.07, Colombo Tamil Sangam Lane,
Colombo - 06.
Tel : +94 112363261
E-mail : noolahamfoundation@gmail.com
Web : www.noolahamfoundation.org

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத் தேதி 28.02.2013

# விவிலியம் கற்போம் - 118

பரிசுப் போட்டி

**இணைச்சட்டம் அதிகாரங்கள் 22-24**

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

மோசே இஸ்ரயேலரிடம் "உன் இனத்தவனின் ஆடோ, மாடோ வழிதவறித் திரிவதைக் கண்டால், அதை அவனிடம் கொண்டுபோய் விடு: வேறு எவருடையதாகவோ இருப்பின் அவனைத் தெரியாதிருந்தால் உன் வீட்டில் வைத்துக்கொள். ........................ தேடிவரும் போது திருப்பிக்கொடு. ஆண்களின் உடைகளைப் பெண்கள் அணியலாகாது. பெண்களின் உடைகளை ஆண்கள் உடுத்தலாகாது. அவை ஆண்டவருக்கு அருவருப்பானவை. வழியோரமாய் மரத்திலோ, தரையிலோ குஞ்சுகள் அல்லது முட்டைகள் உள்ள ........................, அந்தக் குஞ்சுகள் அல்லது முட்டையின் மேல் தாய் உட்கார்ந்திருப்பதையும் கண்டால், குஞ்சுகளோடு தாயைப் பிடிக்காதே. தாயைப் போகவிட்டுக் குஞ்சுகளை எடுத்துக்கொள். நீ நீடூழி வாழ்வாய். நீ புதுவீடு கட்டுகையில் மாடியைச் சுற்றிக் கைப்பிடிச் சுவரைக் கட்டு. ........................ தோட்டத்தில் வேறு விதைகளை விதைக்காதே. மாட்டையும், கழுதையையும் பிணைத்து உழாதே. ஆட்டு மயிரும், நூலும் கலந்து நெய்யப்பட்ட ஆடையை உடுத்தாதே. மேற்போர்வையின் நான்கு மூலைகளிலும் தொங்கல்களை அமைத்துக்கொள். தீமையை அகற்று. அம்மோனியரும், மோவாபியரும் ........................ தலைமுறைவரை அவர்களைச் சார்ந்த எவரும் எக்காலத்திலும் ஆண்டவரின் திருப்பேரவைக்குள் நுழையக்கூடாது. ஏனெனில், நீங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு வரும்வழியில் அவர்கள் உங்களை வரவேற்கவில்லை. பெகோரின் மகன் பிலயாமை உன்னைச் சபிக்கும்படிக்குக் கூலிக்கமர்த்தினர். ஆனால், ஆண்டவர் அச்சாபத்தை ........................ மாற்றினார். உன் வாழ்நாளெல்லாம் நீ அவர்களது நல்லுறவையும், நலத்தையும் நாடாதே. ஏதோமியனை வெறுக்காதே: ஏனெனில், அவன் உன் சகோதரன். எகிப்தியனை வெறுக்காதே: ஏனெனில் அவன் நாட்டில் நீ அன்னியனாய் வாழ்ந்தாய். அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகளின் ........................ தலைமுறை தொடங்கி ஆண்டவரின் திருப்பேரவைக்குள் வரலாம். நீ உன் பகைவருக்கெதிராகச் சென்று பாளையம் இறங்கியிருக்கையில் எல்லாத் தீச்செயலிலுமிருந்தும் விலகியிரு. தம் தலைவனிடமிருந்து தப்பிவந்து உன்னிடம் அடைக்கலம் தேடியுள்ள ........................ அவனிடம் ஒப்படைக்காதே. அவர்களை உன்னோடு வைத்துக்கொள். கொடுமைப்படுத்தாதே. உன் இனத்தவரிடமிருந்து வட்டி வாங்காதே. பணத்துக்கோ, தானியத்துக்கோ கடன் கொடுத்த எந்தப் பொருளுக்கோ, வட்டி வாங்காதே! மாவரைக்கும் கல்லின் கீழ்க்கல்லையாவது, மேற்கல்லையாவது ........................ வைக்காதே. தன் இனத்தாருள் ஒருவனைக் கடத்திக்கொண்டு அடிமையாக நடத்துவதாக அல்லது விற்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால், அக் கடத்தல்காரன் சாகட்டும். வறியவரும் எளியவருமான கூலியாட்களைக் கொடுமைப்படுத்தாதே. ........................ மறையுமுன் அவரது கூலியைக் கொடுத்துவிடு. இல்லையேல் அது உனக்குப் பாவம். பிள்ளைகளுக்காகத் தந்தையரும், தந்தையருக்காகப் பிள்ளைகளும் கொல்லப்பட வேண்டாம். அவரவர் தத்தம் பாவங்கட்காகக் கொல்லப்படட்டும். அன்னியர், அநாதைக்குரிய நீதியைப் புரட்டாதே. கைம்பெண்ணின் ஆடையை அடகாக வாங்காதே. ........................ அறுவடை செய்கையில் விட்டு விட்டு வந்த அரிக்கட்டை எடுக்காதே. அன்னியருக்கும், அனாதைக்கும், கைம்பெண்ணுக்கும் அதை விட்டுவிடு. அப்போது ஆண்டவர் ஆசி வழங்குவார். இவ்வாறே ஒலிவ மரத்தை அடித்து உதிர்க்கும்போதும், திராட்சைத் தோட்டக் கனிகளைச் சேகரிக்கும்போதும் அவர்களுக்கு மீதியை விட்டுவிடு" என்று கூறினார்.

**விடைகள்:** **பத்தாம், மூன்றாம், விளைச்சல், அடிமைகளை, உரியவன், அடகாக, கதிரவன், ஆசியாக, பறவைக்கூட்டையும், திராட்சை.**

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)

# அறிவை வளர்ப்போம் - 118

## பரிசுப் போட்டி




**(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)**

1. அகராதியை முதன் முதல் தயாரித்தவர்
(சாமுவேல் ஜான்சன் - ஸாக்சன் - வீரமாமுனிவர்)

2. மனித உடலிலிருக்கும் சராசரி நீரின் அளவு
(40 லீட்டர் - 45 லீட்டர் - 50 லீட்டர்)

3. சூரியனின் ஆற்றல் ஒளியாக, வெப்பமாக வெளிப்படுவதால் விநாடிக்கு விநாடி குறையும் எடையின் அளவு
(30 இலட்சம் டன் - 20 இலட்சம் டன் - 36 இலட்சம் டன்)

4. "கலை மனிதனையும், ஆன்மாவையும் புலன்களையும் ஒன்றிணைக்கும் ஓர் உயர்ந்த முயற்சி" இவ்வாறு கூறியவர் (தொண்டன் ஜெனவரி 2013)
(திருத்தந்தை - இரவீந்திரநாத் தாகூர் - அன்னை திரேசா)

5. 'கைக்கெட்டியது .......................
(கழுத்துக்கெட்டவில்லை - வாய்க்கெட்டவில்லை - காலுக்கெட்டவில்லை)

6. 'கருத்து' என்பது
(முற்றியலுகரம் - மென்றொடர் குற்றியலுகரம் - வன்றொடர் குற்றியலுகரம்)

பெயர் : ..........................................................................................

முகவரி : ..........................................................................................

..........................................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்- 118
தொண்டன்
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:

..........................................................

# போட்டி முடிவுகள்



## விவிலியம் கற்போம் - 116 விடைகள்

ஆண்டவரே, தீ மிதிக்க, அருவருப்பானவன், இறந்து, இறைவாக்கினனை, பெயரால், கட்டளையிடும், பழிபாவ, பொய்ச்சாட்சி, தீச்செயலை.

## அறிவை வளர்ப்போம் - 116 விடைகள்

1. வெள்ளி 2. ஆயுர்வேதம் 3. 1505 4. கால்பந்து
5. படுக்கப் பாய்க்கு வழியில்ல 6. எதிர்மறை வினைமுற்று

**பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குருஸ் CRS**

**போட்டியின் இரு பிரிவுகளுக்கும் சரியான விடைகளை எழுதி 400/= பரிசு பெறுபவர்**

- ஜோன் ஜிதேஷன் ஜெயராஜ்
  # 65/2, திருச்செந்தூர் முருகன் கோயில் வீதி,
  கல்லடி,
  மட்டக்களப்பு.

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி 200/= பரிசு பெறுவோர்**

- அஸ்லினா எல்டன்,
  # 12, முதல்தெரு, பாரதிபுரம்,
  திருகோணமலை.
- ஜெ. கனிஸ்ரா,
  முருங்கன்பிட்டி,
  முருங்கன்.

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 68 முடிவுகள்**

- **முதலாம் பரிசு - 400/=**
  ச. மேரி ஹெலன் பிரீத்திக்கா,
  65, திருச்செந்தூர் வீதி,
  கல்லடி, மட்டக்களப்பு.
- **இரண்டாம் பரிசு - 300/=**
  ஞா. ஹர்சன்,
  இல. 37,
  வெயிலி வீதி, சின்ன உப்போடை,
  மட்டக்களப்பு.
- **மூன்றாம் பரிசு - 200/=**
  A. கெனிஷா,
  169/1 A, லூட்ஸ் வீதி,
  பார் வீதி,
  மட்டக்களப்பு.

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)**



# காற்றில் கலந்து வரும் ....

இலங்கை வானொலி தேசிய சேவையில்

பெப்ரவரி - 2013 **கத்தோலிக்க நிகழ்ச்சிகள் – தமிழ்**

**கத்தோலிக்க நற்சிந்தனைகள்** - **காலை 5.55 மணி**

நாள் : 01, 09, 10, 11, 12, 13, 14, 15, 23, 24, 25, 26, 27, 28

**புதிய உலகம் (வளர்ந்தோர் நிகழ்ச்சி)** - **மாலை 7.00 மணி**

நாள் : 03, 17

(விவிலிய வழிபாடு, வேரைத்தேடி, உலகத் திருச்சபைச் செய்திகள், சிந்தனை உரை, விடுதலை வீரர் மோயீசன் (ஒலிச்சித்திரம் தொடர்), பாடல்கள் இன்னும்.....)

**சிறுவர் உலகம் (சிறுவர் நிகழ்ச்சி)** - **மாலை 7.00 மணி**

நாள் : 05, 19

(கதையும் கருத்தும், சிறுவர்களுடன் நேர்முகம், கூடிச் செபிப்போம் பாடல்கள் இன்னும்.....)

வெப்ரவரி 13 – திருநீற்றுப்புதன் முதல் தவக்கால வெள்ளிகள் தோறும் சிறப்பு நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றன.

நிகழ்ச்சித் தொகுப்பு:

மலர்வேந்தன்

தொடர்பு:

சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ. எண் – 44,
மட்டக்களப்பு.